Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 18 ஆம் நாள் ரஜப் 24 (2-1-62) செவ்வாய்க்கிழமை இதழ் 275

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழ வேண்டுமானால்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# சினிமா ஊழியர்கள் வேலைக்கு திரும்பினர்

## வேலைநிறுத்தப் பிரச்சினை தொழில்கோர்ட்டுக்குவிடப்பட்டது

கொழும்பு, திங்கள்

**சினிமா ஊழியர் வேலை நிறுத்தப் பிரச்னையை தொழில் தேசியமய மந்திரி கைத்தொழில் கோர்ட்டுக்குச் சமர்ப்பித்தார். இதைத்தொடர்ந்து வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதென சினிமா ஊழியர் முடிவுசெய்தனர்.**

வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் கைத்தொழில் கோர்ட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் வங்கி ஊழியர் இன்னும் வேலைக்குத் திரும்பாமலிருக்கிறார்கள். இது சட்டத்துக்கு மாறானதாகும்.

துறைமுகத்தில் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. "குவாலி" லிகிதர் சங்கத் தூதுகோஷ்டியொன்று நிதியமைச்சரைச் சந்தித்து தங்கள் நிலைமைபற்றி விசாரித்தது. மக்களது நலனுக்குஉழைப்பதே தமது கொள்கையென்வும், தங்கள் கோரிக்கைகளைத் தீர்க்க அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாயும் தூதுகோஷ்டி தெரிவித்த கருத்துக்களை நிதி மந்திரி ஏற்றுக்கொண்டார்.

துறைமுகத் தொழிலாளர், விசேட சட்டத்தின் கீழ்வருவதால் அவர்களது வேலைநிறுத்தப்பிரச்சினையைகட்டாயமத்தியஸ்தத்துக்காக கைத்தொழில் கோர்ட்டுக்கு விடமுடியாது. வங்கி ஊழியர் சங்கமும்இதர தொழிற்சங்கங்களும் இன்றவு கூடிவேலை நிறுத்தத்தைத் தொடருவதா அல்லதுஅரசாங்கத்தின் முடிவை ஏற்றுக் கொள்வதா என்பதைத் தீர்மானிக்கும்.

### திரு. தஹநாயகா யோசனை

வேலைநிறுத்தத்தினல் ஏற்படும் அழிவிலிருந்து நாட்டைக் காக்கும் பொருட்டு எல்லா அரசியல் கட்சித தலைவர்களையும் கூட்டி ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவ முயலும்படி பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு திரு. டபிள்யு தஹநாயகா வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் மேலும் தொழிற் சங்கங்க்ள் வேலைநிறுத்தத்தை நோக்கி நகர்ந்துவருவதாயும், இந்த வேலைநிறுத்தம் பூரணமாய் இருக்குமென்றும் டாக்டர் கொலவின ஆர். டி சில்வா கூறினர்.

---

# போர்த்துக்கலில் ராணுவப் புரட்சி!

## நிலைமை கட்டுக்கு அடங்கியதாம்

லிஸ்பன், ஜன. 1

போர்த்துக்கலில் ராணுவப் புரட்சி ஒன்று நடைபெற்றிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. லிஸ்பனுக்குத் தென்கிழக்கே 120 மைல் தூரத்தில் ராணுவ முகாம் ஒன்றை புரட்சிக்காரர்கள் தாக்கியதாயும், அரசாங்கப் படைகளுக்கும், புரட்சிக்காரர்களுக்குமிடையே சண்டை நடைபெற்றதாயும் போர்த்துக்கல் வெளிநாட்டுமந்திரி காரியாலயம் அறிவித்தது. போர்த்துக்கல் ராணுவ உதவி மந்திரி படுகாயம் அடைந்ததாயும், இப்போது நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுதரப்பட்டுவிட்டதாயும் போர்த்துக்கல் ரமலும் அறிவித்தது.

-----

### கோவா குறித்து அமெரிக்கப் பத்திரிகை கருத்து மாற்றம்

நியூயார்க், ஜன. 1

"போர்த்துக்கல் நியாயமாக நடந்துகொண்டிருந்தால் கோவா துன்ப நிகழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாம்"" என 'நியூயார்க் போஸ்ட்' என்ற அமெரிக்கப் பத்திரிகை தலையங்கம் எழுதியுள்ளது.

### 'இடமாற்றத்தை ரத்துச்செய்க'

கொழும்பு, திங்கள்

அரசாங்கப்பயிற்சிக் கல்லூரிகளின் பட்டதாரி பயிற்சி ஆசிரியர்கள் சங்கம், பொல்கொல்ல அரசாங்கப் பயிற்சிக் கல்லூரியைச்சேர்ந்த 5 பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதை ரத்துச் செய்யுமாறு கல்விமந்திரியைக் கேட்டிருக்கிறது. இந்த இடமாற்றத்திற்கான காரண, சந்தர்ப்பங்களை உடனடியாக விசாரணை செய்யுமாறும் அது கல்விமந்திரியைக் கேட்டிருக்கிறது.

-----

### இன்று முதல் லக்ஷார்ச்சனை

இன்று காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரையும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணிவரையும் ஸ்ரீகுருநாதசுவாமிக்குஅர்ச்சனை நடைபெற்று கடைசி நாள் (8-1-62) திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும் பின் பூசை அர்ச்சனையும் நடைபெற்றபின் இரவு விசேட தீபாராதனையும் மின்சார தீபாலங்காரத்தோடு சுவாமி ஊர்வலமும் நடக்கும்.

### கிரிக்கெட்

கல்கத்தா, ஜன. 1

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 3-ம் நாளான இன்று, இந்தியா தன் 2-வது இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 106 ரன்கள் எடுத்தது.

இந்தியா தன் முதலாவது இன்னிங்ஸில் 380 ரன்களும், இங்கிலாந்து 212 ரன்களும் எடுத்தன.

-----

### ஆஸ்பத்திரி கமிட்டி புதிய அங்கத்தவர்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

புதுவருட ஆஸ்பத்திரி கமிட்டி அங்கத்தவர்களாக கீழ்க் கண்டோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்:

டாக்டர் வி. டி. பசுபதி (தலைவர்) டாக்டர் ஆர். ஈ. டபிள்யூ யோகரத்தினம், திரு. ஈ. டி. சரவணமுத்து யாழ்ப்பாண நகரசபை அங்கத்தவர் ஹாஜி எம். எம். சுல்தான், யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் திரு. ஏ. துரைராஜசிங்கம், திரு. கே. குணரத்தினம், திருஎம்.எஸ்.சுப்பிரமணியம், திரு. ஜி. வி. பாலசிங்கம் (வழக்கறிஞர்) திரு. எஸ். எம். ரிஜ்வே, டாக்டர் ஆர். கந்தையா, திரு. ஈ. மகாதேவா ஜே. பி., எச். பி. வேலாயுதபிள்ளை, மாநகரசபை அங்கத்தவர் டாக்டர் எஸ். தர்மலிங்கம், மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் திரு. எச். முத்துக்குமாரசாமி, திரு வேலும்மயிலும் (வழக்கறிஞர்) திரு. எஸ். வி. கதிரவேலு (வழக்கறிஞர்) ஜனப் எம். ஏ. லி. எஸ். அப்துல்காதர், திரு. எம். கதிரவேலு(வழக்கறிஞர்) திரு. எம். பூபாலசிங்கம், பொது மராமத்து மேற்பார்வை எஞ்ஜினியர், யாழ்ப்பாணம் எஸ். எச். எஸ். கந்தோரைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாண மாநகர சபைஆணையாளர்.

-----

### கென்னடி புதுவருடச் செய்தி

வாஷிங்டன், ஜன. 1

ஜனதிபதி கென்னடி வெளிநாடுகளிலுள்ள ராணுவத்தினருக்கு விடுத்துள்ள புதுவருடச் செய்தியில் சுதந்திரம், நீதி ஆகியன அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையின் குறிக்கோள் என்பதை நினைவிலிருத் திருந்துகொள்ளவேண்டும் எனக் கூறியிருக்கிறர்.

---

# அரசாங்க லிகிதர் சேவா சங்கத்தின் 6 கோரிக்கைகள்

## இவற்றைப்பெற விரைவில் பொது வேலை நிறுத்தம்?

கொழும்பு, திங்கள்

சனிக்கிழமை மாலை நடந்த அரசாங்க லிகிதர் சேவாசங்கத்தின் விசேஷகூட்டத்தில் இம் மாதம் 5-ம் திகதி நடக்கவிருக்கும் அடையாளவேலைநிறுத்தத்தில் இச்சங்கத்தினரும் கலந்து கொள்வதெனத் தீர்மானிக்கப் பட்டது.

பின்வரும் 6 கோரிக்கைகளையும் பெறுவதற்காக ஒருபொது வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்க நிர்வாகசபைக்கு அதிகாரம் வழங்கும் தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

1. தேசிய அபிவிருத்தி வரி ரத்துச்செய்யப்படவேண்டும்.
2. அவசரகால்நிலை அகற்றப் படவேண்டும்.
3. சம்பளக்கமிஷன் அறிக்கையிலுள்ள 'முற்போக்கான சிபார்சுகள்' அமுலாக்கப்படல் வேண்டும்.
4. தொழிற் சங்கங்களின் ஆலோசனையுடன் வாழ்க்கைச் செலவைக்குறைக்க முயற்சிக்க வேண்டும்.
5. உணவு முதலிய அத்தியாவசிய பொருட்கள் மீதுள்ள எல்லாவரிகளும் அகற்றப்படுவதுடன், மாவு, தீப்பெட்டி, புகையிலை ஆகியவை மீது புதிதாக விதிக்கப்பட்டவரிகள் யாவும் வாபஸ்பெறப்படவேண்டும்.
6. அரசாங்கஸ்தாபனங்களிலிருப்போருக்கு தொழில் பாதுகாப்பளிக்கக்கூடிய முறையில் சட்டபூர்வமான ஒழுங்கு விதிகள் இயற்றப்படுதல் வேண்டும்.

---

# இலங்கை இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் அலுவல்கள்

## பிரதமர் ஆரம்பித்துவைத்தார்

கொழும்பு, திங்கள்

இலங்கை இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் அலுவல்களை இன்று பிரதமரும், வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். பிரதமர் முதலில் தமது குழந்தைகள் சார்பில் இன்ஷூரன்ஸ் "பாலிஸி"களை வாங்கினர். வர்த்தக மந்திரி, 4 "பாலிஸி"கள் வாங்கினர். பிரதமர் இவ்வைபவத்தில் பேசும்போது இந்தியாவிலிருந்து முதல்தர இன்ஷூரன்ஸ் நிபுணர் ஒருவரை இலங்கைக்குத் தந்துதவியதற்காக திரு. நேருவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

-----

### சோஷலிஸ்ட் தேர்தல் அறிக்கை

புதுடில்லி, ஜன. 1

இந்திய சோஷலிஸ்ட் கட்சி தன் தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்று வெளியிட்டது.

### பாரதத்தில் விசேஷ தபால் முத்திரை

புதுடில்லி, ஜன. 1

கௌஹாத்தியில் பாரத எண்ணை சுத்திகரிப்புத்தொழிற்சாலை ஆரம்பமாகியதின் ஞாபகார்த்தமாக விசேஷ தபால் முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

-----

### ராஷ்டிரபதி அங்கீகாரம்

புதுடில்லி, ஜன. 1

சாகுபடி செய்வோரை எந்தக் காரணத்தைக் கொண்டும் நிலச்சுவாந்தார்கள் வெளியேற்ற முடியாது என்று மைசூர் ராஜ்யம் நிறைவேற்றிய சட்டத்துககு ராஷ்டிரபதி அங்கீகாரமளித்துவிட்டார்.

# "சென்ட் தோமஸ் கல்லூரியை அரசாங்கம் எடுக்கவேண்டும்"

## தெஹிவளை--கல்கிசை மாநகரசபையில் தோல்வியடைந்த பிரேரணை

தெஹிவளை, திங்கள்

கல்கிசை சென்ட் தொமஸ் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும்' என்ற பிரேரணையொன்றை எஸ். எல். எப். பி. அங்கத்தவர் திரு. ஆர். பி. ஜயவர்த்தன தெஹிவளை கல்கிசை மாநகர சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து கூட்டத்தில் காரசாரமான பேச்சு வார்த்தைகளும் விவாதங்களும் நடைபெற்றன.

நகரசபை எல்லைக்குள் உள்ள பள்ளிக்கூடங்களில் சென்ட் தொமஸ் கல்லூரியே சகல வசதிகளையும் கொண்டது என்றும், ஆனல், பணக்காரப் பிள்ளைகளுக்கு மட்டுமே அது ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் பிரேரணையைச் சமர்ப்பித்து வைக்கும் போது திரு. ஜயவர்த்தன கூறினர்.

இக் கல்லூரியில் ஏழை மாணவர்களுக்கு இடமில்லையெனவும் ஆகவே இக்கல்லூரியின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் திரு. ஜயவர்த்தன காரணம் கூறினர். இப் பள்ளிக்கூடத்தின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் நகர சபை எல்லைக்குள் உள்ள கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் அனைத்தும் நீங்கிவிடும் எனவும் அவர் கூறினர்.

ஈற்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சாதகமாக 7 வாக்குகளும் பாதகமாக 9 வாக்குகளும் பெற்றதன்பேரில் மேற்படி பிரேரணை தோல்வியடைந்தது.

---

## வெண்ணை தயாரிக்க நூதன இயந்திரம்

ஸ்கெலஸ்விக்" ஜன. 1

பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பது, அதை திரட்டுவது, வெட்டுவது, பொட்டலங்களாகக் கட்டுவது ஆகிய எல்லா வேலைகளையும் இந் நகரிலுள்ள ஒரு தொழிற் சாலையில் இயந்திரங்களே செய்கின்றன. வெண்ணெய் கையினல் தொடப்படுவதேயில்லை. ஐரோப்பாவிலேயே வேறு எந்த இடத்திலுமே இவ்வித நவீன இயந்திரங்கள் கொண்ட வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை கிடையாது.

ஹோல்ஸ்டீனிலுள்ள 5000 பால்காரரிடமிருந்து சப்ளை பெறும் 43 பால் பண்ணைகள் கூட்டுறவில் ஒத்துழைப்பதன் மூலமே இத் தொழிற்சாலை இயங்க முடிகிறது. இவர்கள் தாங்களாகவே வெண்ணெய் தயாரிப்பதை பத்து வருடகாலத்துக்கு நிறுத்திக்கொண்டு [illegible] கொடுத்து வருகின்றனர்.

இத் தொழிற் சாலை அமைக்க 60 [illegible] ஜெர்மன் மார்க்குகள் [illegible]ள்ளன. ஒரு வருஷத்தில் 5000 டன் வெண்ணெய் தயாரிக்கப்பட்டு ஹாம்பர்க்கிற்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்தப்பாலை ஸ்கெல்ஸ்விக்கில் "வெள்ளை நிலக்கரி" என்று அழைக்கிறார்கள்.

குளிர்பதன சாதன மூலம் பால், வெண்ணெய்யைக் கெடாமல் உபயோகிக்க முடிகிறது. என்பதுடன் எக்காலத்திலும் ஒரேவிதமான வெண்ணெயை விநியோகம் செய்ய சாத்தியமாகிறதென்றும் கூறப்படுகிறது. சுமார் 700 டன் பால் குளிர்பதன சாதனத்தில் கெடாமல் பாதுகாக்கப்பட்டு பின்னர் உபயோகிக்க முடிகிறது.

வெண்ணெய் உற்பத்தியில் பொருள் கெடாமல் இருக்க அமிலக் கட்டுப்பாடு மிக அவசியம். வெண்ணெயில் "பட்யிரிக்" அமிலம் இருக்கிறது. நூதன இயந்திர சாதனத்தின் மூலம் வெண்ணெய் கெடாமல் தயாரிக்க வழில் செய்யப்படுகிறது.

இத்த ச் நூதன தொழிற்சாலை அமைத்திருப்பது பால் பண்ணைத் தொழில் வளர்ச்சியில் முதல் படியே யாகும். மேலும் பல வெண்ணெய் உற்பத்தி சாலைகள் இறைச்சி தயாரிப்புசாலைகள் இதைத் தொடர்ந்து ஏற்படலாம். ஸ்கெல்ஸ்விக் தொழிடு வளமான இடமல்லல் ஆனல் வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலையை ஏற்படுத்தியதன் மூலம் குறை நிவர்த்திக்கப் பட்டு விட்டது.

---

## வவுனியா எம்.பிக்கு கல்லூரி அதிபர் பாராட்டு

முள்ளியவளை, திங்கள்

"வவுனியாத் தொகுதியிலுள்ள ஏனைய மகா வித்தியாலயங்களைப் பார்க்கிலும் எமது மகாவித்தியாலயம் முன்னணிக்கு வந்து கொண்டிருப்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன். இந்த நிலையை நாம் எய்துவதற்கு, வவுனியா எம். பி திரு. தா. சிவசிதம்பரம், அயராது உழைத்துள்ளார். அவரது முயற்சியினலே 1-1-62 தொடக்கம் விசேட விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவரும், உயர்தர கணிதத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவரும், பயிற்றப்பட்ட தமிழாசிரியை ஒருவரும் இங்கு நியமனம்பெற்றுள்ளார்கள்"

ஒமந்தை அரசினர் மகாவித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. கே. சுந்தையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"எமது வித்தியாலயத்தின் இடநெருக்கடியைப் போக்குவதற்காகப் 10 ஆயிரம் ரூபாய் செலவில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினல் கட்டப்பட்டுவரும் கட்டடம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இம்மாத முற்பகுதியில் அது பூர்த்தியானதும் இடநெருக்கடியும் தீர்ந்து விடும்"

---

## உங்கள் நோய்

குணடபடுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்திய பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாண

---

## நோட்ட பிள்ளைகள் மீது அரசாங்கம் பாரபட்சம்

அட்டன், திங்கள்

'சோஷலிஸம்பேசும் அரசாங்கம் மலைநாட்டுத் தமிழர்களின் பிள்ளைகள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுவது வருத்தத்துக்குரிய விஷயம்' என ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் ஹாஸ்டல் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தொண்டன் ஆசிரியர் திரு. எஸ். எஸ். நாதன் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஹாஸ்டல் அதிபர் திரு. பி. சதாசிவம் பேசுகையில், மலைநாட்டு மக்களுக்கு தமிழ் தினசரிப் பத்திரிகைகள் செய்து வரும் சேவையைப் பாராட்டினர்.

தொழிலாளர்களின் பிள்ளைகளில் ஐந்து பேரை (ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் ஹாஸ்டலின் ஆதரவில் (எஸ். எஸ். ஸி) சோதனை சித்தியடைந்திருக்கும் மாணவர்களை) மேல் படிப்புக்காக திருச்சி, சென்னை, ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைத்து படிக்க வைப்பது என்னும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றது. மேற்படி தீர்மானத்தை ஆதரித்து அன்புமணி, பி. எம். கே. சாமி ஆகியோர் பேசினர்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## அட்டவணையை மாற்ற வேண்டும்

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்லும் இயந்திர படகு காலை 7-30 மணிக்கு தலைமன்னாரிலிருந்து புறப்படும் என தென்னிந்திய ரயில்வேயினரது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள போதும் இலங்கை சுங்க இலாகா அலுவல்களினல் ஏற்படும் தாமதம் காரணமாக மேற்படி இயந்திரப் படகு ஒரு போதும் குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட முடிவதில்லை. சாதாரணமாக காலை 10-30 மணிக்குப் பின்னரே பிரஸ்தாப படகு புறப்படுவது வழக்கமாகிவிட்டது.

இதன் காரணமாக மத்தியானம் 12-30 மணிக்கு தனுஷ்கோடியிலிருந்து சென்னைக்குச் செல்லும் 'மெயில்' புகையிரதத்தைப் பிடிப்பது மேற்படி இயந்திரப் படகில் செல்லும் பிரயாணிகளுக்கு மிகவும் சிரமமாயிருக்கிறது.

10-30 மணிக்குப் பின்னரே மன்னாரிலிருந்து படகு புறப்படுவதே வழக்கமாகி விட்டதால் தென்னிந்திய ரயில்வேயினர் அதற்கேற்ப தமது அட்டவணையை மாற்றி, சென்னை புகையிரதம் தனுஷ்கோடியிலிருந்து புறப்படும் நேரத்தை பிற்பகல் 1-45க்கு மாற்றுவது பிரயாணிகளது சிரமத்தை பெரிதும் தீர்க்க உதவுவதாகும்.

இம்மாற்றங்கள் பிரயாணிகளுக்கு மிகவும் சௌகரியத்தை ஏற்படுத்துமாதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்க வேண்டுமென வேண்டிக்கொள்கிறோம்.

கொழும்பு எஸ். கருணாநிதி
கூட்டுக் காரியதரிசி
செட்டியார் வர்த்தக சம்மேளம்

---

## பொலிடோல் அருந்தி தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

மாவிட்டபுரம் உடுவில் வீதியைச்சேர்ந்த அழகரத்தினம் மகேந்திரன் (25) என்பவர் நேற்று பொலிடோல் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

மரண விசாரணை அதிகாரி இதுசம்பந்தமாக விசாரணை செய்தபோது இறந்தவரின் தாயாகிய சிவக்கொழுந்து தெரிவித்ததாவது;-

எனது மகன் வவுனியாவில் ஹோட்டல் ஒன்றை நடத்திவந்தார். அவர் இந்த ஹோட்டலை சிலருக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். குத்தகைக்கு எடுத்தவர்களுக்குமெனது மகனுக்குமிடையில் சில சச்சரவுகள் ஏற்பட்டிருந்தது. அவர் சென்ற சனிக்கிழமை வீட்டுக்கு வந்து ரூ. 200 தரும்படி எங்களிடம் கேட்டார். நாங்கள் ரூ. 50 கொடுத்தோம். அதைப் பெற்றுக்கொண்டு சென்றார்.

நேற்று அவர் வீட்டுக்கு வந்து இன்றுதான் எனது வாழ்வின் இறுதிநாள் என்று கூறிக்கொண்டே சிறு பொலிடோல் தகரத்தை எடுத்தார். நான் அதைப்பறித்து எறிந்து விட்டு உடனே அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அங்கே அவர் மரணமானர். அவர் கற்பழிப்பு வழக்கொன்றிலும் சம்பந்தப்பட்டிருந்தார். அவருக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் திருமணமாகியிருந்தது. 4 மாதக் குழந்தையொன்றும் இருக்கிறது.

இறந்தவரின் மனைவி, சகோதரி ஆகியோரும் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

---

## 'பத்திரிகைகளை அரசாங்கம் சுவீகரிப்பது ஜனநாயகமல்ல'

### பதுளை நகரசபையில் நிறைவேறிய எதிர்ப்புப் பிரேரணை

பதுளை, டிச. 31

"பத்திரிகைகளுக்கு 100 வீத சுதந்திரம்அளிப்பது முற்றிலும் அவசியமானது. பத்திரிகைகளை அரசாங்கம் சுவீகரிப்பது ரஷ்யா போன்ற நாடுகளில் சாதாரணமாயிருக்கலாம். ஆனல் இலங்கையரான நாம் அரசாங்கம் பத்திரிகைகளை எடுப்பதை நிச்சயம் எதிர்க்க வேண்டும்."

பதுளை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில், பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதை கண்டித்து ஐ.தே.கட்சி கொண்டுவந்த தீர்மானத்தை ஆமோதித்துப் பேசிய நகர சபை அங்கத்தவர் திரு. ஏ. கே. முருகேசு மேற்கண்டவாறு கூறினர்.

திரு. முருகேசு மேலும் பேசுகையில் அரசாங்கம் பத்திரிகைகளை எடுப்பதற்கு எந்த விதமான காரணமுமில்லை எனக் கூறினர்.

இத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் பத்திரிகைகள் ஜனநாயக வாழ்விற்கு மிகவும் அவசியம் எனவும், அவற்றை அரசாங்கம் எடுப்பது ஜனநாயக இலட்சியத்திற்கு சாவு மணி அடிப்பது போலாகுமென்றும் ஐ.தே.சாகிப் குறிப்பிட்டார்.

### "ஜனநாயகம் இல்லை"

அங்கத்தவர் திரு. ஜீ. டீ. குணசேகரா பேசுகையில் தற்போது இலங்கையில் ஜனநாயகம் இல்லையெனவும் பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்து நடத்தினல் தேசிய மயமாக்கப்பட்ட மற்ற தொழில்களைப் போல குழப்பத்திலேயே முடியுமெனவும் கூறினர்.

தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 5 அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

---

## நமது நூல் நிலையம்

Biology: By V. Rama-krishnan B. A., B. Sc (Hon) and T. Puthrasingam B. Sc Price: R s. 9.
P.P. 301. Rs. 9.

கல்லூரி இறுதிப் பரீட்சைகளுக்குப் படிக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடியதாக அமைந்துள்ளது. திருவாளர்கள் வீ. இராமகிருஷ்ணன், ரீ. புத்திரசிங்கம், ஆகியோரால் எழுதப்பட்டு சமீபத்தில் வெளியாகியுள்ள "உயிரியல்" நூல். இலங்கையில் இத்தகையதோர் நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும்.

தாவரவியல், விலங்கியல் ஆகியவற்றின் வெறும் சேர்க்கையாக உயிரியலைக் கற்பிப்பதே பாடசாலைகளில் தற்போது வழக்கிலுள்ள முறையாகிவிட்டது. தாவரவியல், விலங்கியல் என்பனவற்றிற்கிடையே உள்ள இயல்பான ஒருமை உயிரியலைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுட் பெரும்பாலானேரால் கவனிக்கப்படுவதில்லை. தற்போது வெளியாகியுள்ள "உயிரியல்" நூல் அக்குறையை நிவர்த்தி செய்வதாய் அமைந்துள்ளது. உயிர், உயிரினங்கள் என்பன ஒரு பகுதியின் உட்பிரிவுகளாகவே இந் நூலில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

விஷயங்களைக் கூறும் முறை மிகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் காணப்படுகிறது. மாணவருக்கும் ஆசிரியருக்கும் பயன் படக்கூடிய விளக்கப் படங்களும், சாதன முறை பற்றிய யோசனைகளும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

முக்கியமாக ஜீ. சீ. ஈ. மாணவர்களுக்குப் பயன் படக்கூடியதாக அமைந்துள்ள இந்த நூலை மாணவர் பெரிதும் விரும்புவர் என்பதில் ஐயமில்லை.

—ஜே. எஸ். அரியரத்தினம்

**ஈழத்துச் சிதம்பரம்:** ஆசிரியர்: சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள்; வெளியீடு: காரைநகர் சுந்தரேசுவரர் தேவத்தானம்; விலை ரூ. 2-50.

காரைநகரிலுள்ள புராதன சிவாலயம் 'ஈழத்துச் சிதம்பரம்' என வழங்கப்பட்டு வருகின்றது. திண்ணபுரம் எனப்படும் இப்புண்ணிய தலத்தின் பெருமையை விளக்கும் வகையில் இந்நூல் வெளியிடப்பெற்றுள்ளது. சிதம்பரத்துக்குச் செல்ல முடியாதவர்களுக்குச் இத்தலம் உபய சிதம்பரமாக அமைந்து விளங்குகின்றது.

ஈழநாடு எனப்படும் இலங்கை முதலாகப் பல பகுதிகளைக் கொண்டதாய் வெளியிடப்பெற்றுள்ள இந்நூலில் இப்புராதன ஆலயத்தின் வரலாறு திட்டமும் நுட்பமும் அமைய இனிய நடையில் விளக்கப்பெற்றிருக்கின்றது. இந்நூலின் அநுபந்தமாகத் திண்ணபுர அந்தாதி, திண்ணபுரம் சுந்தரேசர் திருப்பதிகம், சுந்தரேசர் திருவூஞ்சல், திண்ணபுர வெண்பா ஆகிய பிரபந்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை இந்நூலுக்கு மேலும் சிறப்பளிக்கின்றன.

ஈழத்தின் பழமையும், சைவமும், தமிழும் பண்டைக் காலந்தொட்டு இங்கு சிறந்து விளங்கியமையும் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன. வடிவேலெறிந்த வான்பகை பொறாது, கடல் குமரி நாட்டின் பெரும் பகுதியை விழுங்கியபோது எஞ்சிய பகுதி காரைத்தீவாய்க் காட்சியளிக்கின்றது என்று அகத்தியர் வரலாற்றிலும், வடமொழி தென்மொழி வல்ல அகத்தியர் காரைத்தீவில் வசித்தார் என்று புத்த ஜாதகத்திலும் கூறப்படுதலையும், தூர்வாச முனிவர் இத்தீவில் அமர்ந்துதவஞ்செய்தார் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுதலையும் எடுத்துக் காட்டி இத்தீவின் பழைமையையும் பெருமையையும் ஆசிரியர் விளக்கியுள்ளார் எனச் சங்க நூற் செல்வர் பண்டிதர் ச. அருளம்பலவனர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாலயத்தின் வரலாற்றைப் பலரும் பல விதமாகக் கூறுதலின் மக்கள் உண்மையை உணரவேண்டுமென்ற விருப்பின் காரணமாக வைதிக சைவக் கிரியா நிபுணரான சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள் இவ்வரலாற்றினை எழுதியுள்ளார்.

நடராஜப் பெருமானின் மூவர்ணப்படம் நூலின் முகப்பில் விளங்குகின்றது. அத்துடன் இருபத்தொரு அழகிய புகைப்படங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்நூலை அழகுற வெளியிட்டுதவிய காரைநகர் சுந்தரேசுவரர் தேவத்தானத்துக்கு சைவ நன்மக்களின் நன்றி உரியதாகும்.

# "காலனி ஒழிப்பினல் ஐ.நா. பலவீனமடையுமா?"

## அப்படியானல் அதை திருத்தியமைப்போம்"

### திரு. மேனன் அறைகூவல்

பம்பாய், ஜனவரி 1

"காலனி ஆதிக்கங்களின் முடிவுகாரணமாக ஐ. நா. ஸ்தாபனம் பலவீனமடையுமானல் அதைச் சீரமைத்து நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டியது எல்லாநாடுகளினதும் கடமை" என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் நேற்று பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கோவாவை விடுதலை செய்ததால் ஐ. நா. பலவீனமடையுமென்றோ அல்லது அழிந்துவிடுமென்றோ கூறுவது அபத்தமாகும் என்று திரு. கிருஷ்ண மேனன் கூறினர்.

"காலனி ஆதிக்கம் உலகில் ஒழியவேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச்சபையில் தீர்மானம் நிறைவேறியபொழுது அதை தென்னுபிரிக்கா தவிர இதர நாடுகள் எல்லாம் ஆதரித்தன. இன்று கோவா நடவடிக்கைக்காக இந்தியாவைக் குறைகூறுவோர் கூட அன்று அத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். ஐ. நா. சாஸனத்தை மீறியது போர்ச்சுக்கீஸியரே தவிர பாரதம் அல்ல" என்று திரு. மேனன் கூறினர்.

சமாதானம்தான் பாரதத்தின் கொள்கையென்ருலும் தனது ஆதிபத்திய உரிமையையும் பிரதேச உரிமையையும் விட்டுவிட அது தயாராக இல்லை என்று திரு. மேனன் கூறினர்.

காஷ்மீர் பிரச்சினையை பாக்கிஷ்தான் மீண்டும் பாதுகாப்புச்சபைக்கு எடுத்துச்செல்லப் போவதாக வெளிவந்த செய்திகளைப்பற்றிக் குறிப்பிட்டுத் தான் ஆக்கிரமிப்புச்செய்துள்ளதென்பதை உணர்ந்து காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான்வெளியேறிவிடுமென்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்புச்சபைத் தீர்மானத்துக்கிணங்க நடந்துகொள்ளாமல் மீண்டும் பாதுகாப்புச் சபைக்குப் போவது ஏன்? என்று திரு. மேனன் கேட்டார்.

இந்தியாவும் பாக்கிஸ்தானும் சமாதானமாக வாழ்வதில் தான் முன்னேற்றமிருக்கிறதென்று திரு. மேனன் கூறினர்.

## ஜெர்மானியர்கள் அரிசியை அதிகமாக உபயோகிக்கிறர்கள்

பிராங்பர்ட், ஜன 1

மேற்கு ஜெர்மன் வியாபாரிகளுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் தெரியாத ரக அரிசியே இல்லை என்று சொல்லலாம். பர்மா, சயாம், ஜாவா, கரோலின மற்றும் இதர ரக அரிசியை எல்லாம் அவர்கள் வரவழைக்கிறர்கள். ஹாம்பர்க், மூனிச், பிராங்பர்ட், டல்லல்டிராப், ஸ்டட்கார்ட்,மேற்கு பெர்லின் ஆகிய நகரங்களிலுள்ள மளிகைக் கடைகளில் அரிசி விற்கப்படுகின்றன. ஜெர்மானியர்கள் அரிசியாலான உணவுப் பண்டங்களை விசேஷ தினங்களிலும் விருந்துகளுக்குமே உபயோகித்து வருகிறர்கள்.

சமீபகாலத்தில் ஜெர்மானியர்கள் அரிசியை உபயோகிப்பது அதிகரித்துள்ளது என்று பொருளாதாரப் புள்ளி விவர நிபுணர்கள் கூறுகின்றனர். அரிசி உபயோகம் பல வருஷங்களுக்கு முன்பு இருந்தபோதிலும் நடுவில் அடியோடு கைவிடப்பட்டு இறக்குமதியே இல்லாமலிருந்தது. ஆனல்இப்போது மீண்டும் அரிசி உபயோகிப்பது ஆரம்பிக்கப்பட்டு அதிகரிக்கப்பட்டும்விட்டது.

1955 முதல் 58 வரை தலா 2·5 கிலோ அரிசி உபயோகிக்கப்பட்டுவந்து பின்னர் 1·2 கிலோவாகக் குறைந்தது இப்போது தலா உபயோகம் 1·9 கிலோவாக இருக்கிறது.

1960–ல் இறக்குமதி செய்யப்பட்ட 1,11,000 டன் அரசியில் சுமார் 11,000 டன் அரிசி தீட்டப்பட்டது, பாக்கியுள்ளது மேற்கு ஜெர்மன் மில்களில் தீட்டப்பட்டதாகும். மேற்கு ஜெர்மன் மக்கள் தீட்டப்பட்ட வெள்ளை அரிசியைத் தான் விரும்பி உபயோகிக்கிருர்கள்.

## வல்வெட்டித்துறைக்கு வெற்றிக் கேடயம்

பருத்தித்துறை, திங்கள்

அல்வாய் சித்திரா பூரணை விளையாட்டுக் கழகம் நடாத்திய உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 1-ம், 2-ம் பிரிவுச் சம்பியன்களான வல்வை யுனைடெட், திக்கம் இ. வி. கழகம் ஆகிய இரு கோஷ்டிகளுக்கும் இடையே இறுதி ஆட்டங்கள் நேற்றையதினம் நடைபெற்றன.

திக்கம் 1 கோலையும் வல்வெட்டித்துறை 3 கோலையும் போட்டது. திக்கத்தைத் தோற்கடித்ததால் சுற்றுப் போட்டிக்கான வெற்றிக் கேடயத்தை வல்வெட்டித்துறை சுவீகரித்துக் கொண்டது. திரு. ஏ. சுப்பிரமணியம் இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தார். இச்சுற்றுப்போட்டியில் மொத்தம் எட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன.

## புதுவருடத்தை முன்னிட்டு

### மகாராணியின் கௌரவப்பட்டங்கள்

லண்டன், ஜனவரி

புதுவருடத்தை முன்னிட்டு எலிசபெத் மகாராணி பிரபல எழுத்தாளர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும், வர்த்தகத் துறையில் முன்னணியில் நிற்பவர்களுக்கும், வீரம் வாய்ந்த போர் வீரர்களுக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்கினர்.

முன்னைய வெஸ்ட் இந்திய கிரிக்கட் வீரர் லேரிகொன்ஸ்டென்டைன் உட்பட 22,260 பேர்களுக்கு மகாராணி கௌரவப் பட்டங்கள் வழங்கினர்.

## "பார்லிமெண்ட் கேள்விகளுக்கு அ. அதிபர்களே பதிலளிக்கவேண்டும்"

### கமிஷனர் அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

பார்லிமெண்டில் அரசாங்க அதிபர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் அரசாங்க அதிபர்களே பதில் அளிக்க வேண்டும் எனவும், பதில் அளிப்பதை வேறு எவரது பொறுப்பிலும் விடக்கூடாது எனவும் காணிக் கமிஷனர் திரு. எச். சி. குணவர்த்தன அரசாங்க அதிபர்களைக் கேட்டுள்ளார்.

அரசாங்க அதிபர்களுக்கு விடுத்த அறிக்கையொன்றில் திரு. குணவர்த்தன கூறியுள்ளதாவது:-

"பார்லிமெண்டில் கேட்கப்படும் கேள்விகளுக்கு அரசாங்க அதிபர்கள் கவனமாகப் பதில்களைத் தயார்செய்து கொண்டு வரவேண்டியவர்களாகின்றனர். அரசாங்க அதிபர்கள் முன்னதாகவே தமது பதில்களை என்னுடன் கலந்தாலோசித்துக் கொண்டால் நன்ருகவிருக்கும்".

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசாங்க அதிபர் விடுமுறையிலோ அல்லது வேறு அலுவலாகவோ வெளியே சென்றிருந்தால், அவரது உயர் அதிகாரி ஒருவர் அவரது வேலைகளுக்கு உதவி செய்யலாம். இந்தச் சமயங்களில் சங்கடமான விஷயங்களுக்குப் பதில் வழங்கவேண்டி நேரிட்டால், அவற்றுக்குத் தற்காலிகமாகக் கடமையாற்றும் அதிகாரிபதில்வழங்குவதற்குத்தாம் அனுமதி வழங்குவதாக தனது கைச்சாத்திட்ட பத்திரமொன்றை அரசாங்க அதிபர் அனுப்பிவைக்க வேண்டும்.

## அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்:

# "எமது குறைபாடுகள் கவனிக்கப்படவில்லை"

## அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளாது விடுவதற்கு விளக்கம்

கொழும்பு, திங்கள்

இம்மாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கும் அடையாள வேலை நிறுத்தத்தில் சேர்ந்துகொள்வதில்லையென 'அரசாங்க எழுது வினைஞர்' சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

ஆயினும் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் பிற ஊழியரது அலுவல்களைத் தமது அங்கத்தவர்கள் கவனிக்கக்கூடாதெனவும் நிர்வாகக் கமிட்டியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

சிறுபான்மையினராயிருக்கும் ஒரே காரணத்துக்காக, பல பாதகமான நிபந்தனைகளுக்குட்படுத்தப்பட்டிருக்கும் அரசாங்க எழுது வினைஞர்களது குறைகள், அடையாள வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டிருக்கும் தொழிற் சங்கங்களினல் கவனிக்கப்படவில்லையெனவும், அடையாள வேலை நிறுத்தம் செய்வது பற்றி தம்முடன் யாரும் கலந்தாலோசிக்கவில்லையெனவும், இச் சங்கத்தினர் தாம் இவ் வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொள்ளாது விடுவதற்குக் காரணங் காட்டியுள்ளனர்.

அரசகரும மொழி பற்றிய நிபந்தனையால் பல சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்படுவதுபற்றி 'தொழிலாளர் உரிமை'களுக்காக போராட முற்பட்டிருக்கும் தொழிற் சங்கங்கள் எவையும் சிரத்தையெடாதது வருந்தத்தக்கது என அ. எ. வி. சங்க காரியதரிசி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வேலை நிறுத்தத்தில் தாம் சேராதபோதும், துறைமுக வேலைக்கு இராணுவத்தினரையும் கைதிகளையும் உபயோகிப்பது தவருனதெனவும், அவர்கள் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டுமெனவும் மேற்படி சங்கத்தினர் கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

## மாரடைப்பினல் மரணம்

முள்ளியவளை, திங்கள்

நாகமுத்து சபாபதி (வயது 40) என்பவர், காஞ்சுரமோட்டை என்னும் இடத்திலுள்ள தனது வயலில், மற்றும் இருவருடன் தங்கியிருக்கையில் கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டதால் உடனடியாக முள்ளியவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் பொழுது மரணமானர்.

முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். பத்மநாதன் பிரேத பரிசோதனை நடத்தினர்.

முள்ளியவளைப் பகுதித் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. குட்டித்தம்பி, சட்ட வைத்திய அதிகாரியினதும், மற்றையோரினதும் சாட்சியங்களைக் கொண்டு மாரடைப்பினல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## நெற்காணி விபரங்கள் சேகரிக்குமாறு மந்திரி வேண்டுகோள்

கொழும்பு, திங்கள்

"இலங்கையிலுள்ள நெற்காணிகளின் பரப்புகள், விளைவுகள் பற்றிய விபரங்களைத் திட்டவட்டமாக எடுக்க வேண்டும்" எனக் காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சு அரசாங்க அதிபர்களுக்கும்,காரியாதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

நெற்காணிகளை அளப்பதில் கஷ்டங்கள் அதிகமுண்டு.ஆகையால் சரியான விவரங்களைப் பெற்றுக்கொள்வது கஷ்டமாகவிருக்கிறது எனக் காணி விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. ஜி. எல். மிசோ கூறியுள்ளார்.

## சுகாதார சேவையாளருக்கு டைரக்டர் பாராட்டு

கொழும்பு, திங்கள்

சுகாதார சேவைப் பகுதியிலுள்ள தொழிலாளர் அனைவருக்கும் சுகாதார டைரக்டர் டாக்டர் டபிள்யூ. ஏ. கருணுரத்ன ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

'நீங்கள் அனைவரும் சமூக சேவையாளர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. நோயினல் வருந்தும் மக்களுக்குக் கடமையாற்றுவததே உங்கள் தொழில் என்பதை நீங்கள் எப்பொழுதும் மனதில் வைத்திருக்கவேண்டும்.

டாக்டர் கருணுரத்ன, சுகாதாரப் பகுதி சேவையாளருக்கு விடுத்த புதுவருடச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

"உங்கள் மீது நான் மிகவும் நம்பிக்கை வைத்துள்ளேன். வேலைகள் துரிதமாக அதிகரித்துக்கொண்டு வந்தபோதிலும் வைத்தியத் துறையில் சேவையாளர் தொகை குறைவாக இருந்தபோதும், நீங்கள் அயராது உழைத்து வருகிறீர்கள். உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப நீங்கள் கடமையைச் செய்து வந்திருக்கிறீர்கள்"

1961ம் ஆண்டில் சுமார் பதினைந்து லட்சம் நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரி வார்டுகளில் சுகாதாரப்பகுதி சிகிச்சை வழங்கியுள்ளதாக டாக்டர் கருணுரத்ன கூறியுள்ளார்.

"சுமார் 85,000 நோயாளிகள் வெளி நோயாளர்களாக ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்தப் பெரிய தொகையே, சுகாதாரப் பகுதி சேவையாளரின் ஊக்கமுடைய சேவைக்கு எடுத்துக் காட்டாகும். இந்த வேலை அனைத்தையும் திருப்தியாகச் செய்திருக்கிறீகள். சேவை காரணமாக உங்களில் பலர் தமது சொந்த நலன்களையும் தியாகம் செய்திருக்கிறீர்கள். உங்கள்சேவைக்கு நாட்டு மக்கள் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர்.

## ஜெர்மன் மொழியில் பகவத்கீதை

ஸ்டட்கார்ட், ஜன. 1

கிறிஸ்துமஸ் சமயத்தில் பரிசாக வழங்கப்படுவற்காகவே பகவத்கீதையை ஜெர்மன் மொழியில் ஒரு அழகான புஸ்தகமாக ஹான்ஸ் குயேந்தரின் அச்சகம் வெளியிட்டுள்ளது.

நீண்டகாலமாகவே பகவத்கீதையை ஜெர்மன் மொழியில் வெளியிட வேண்டும் என்று பல ஜெர்மனியர் விரும்பி வந்தனர்.

ஜெர்மனியர்களுக்கு நன்கு அறிமுகமானவரும், ஜெர்மனியில் இந்தி[illegible] பல பிரசங்கங்களைச் செய்தவருமான பங்களூரைச் சேர்ந்த டாக்டர் டி. ஆர். ஆனந்தராமன் என்பவர் இப்புத்தகத்திற்கு முன்னுரை எழுதியிருக்கிறர்.

இப்புத்தகத்தில் ஜெர்மன் மொழி பெயர்ப்போடு சமஸ்கிருத மூலத்தை லத்தீன் லிபியில் அச்சிட்டுள்ளனர்.

## இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் வேலை ஆரம்பம்

### "சகல மக்களுக்கும் உதவும்"

— உணவு மந்திரி

கொழும்பு, திங்கள்

இன்றிலிருந்து இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் தனது வேலையை ஆரம்பிக்கிறது.

இது பற்றி உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தெரிவித்துள்ளதாவது:

"இன்சூரன்ஸ்செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொருவருக்கும் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் தன்னலான சேவையைச் செய்யும். அத்துடன் சகல மக்களிடையேயும் சேமிப்பு வழக்கத்தை உண்டாக்கி செலவினங்களைக் கட்டுப்படுத்தச்செய்யும் இவ்வித தேசிய ஸ்தாபனத்துக்கு பொது மக்களெல்லோரும் ஆதரவு தரவேண்டும்"

புதிய கார்ப்பரேஷனின் தலைவர் ஜனுப் எம். ராவீக் குறிப்பிட்டுள்ளதாவது: இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனின் வேலை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து கண்டி, காலி, நீர்கொழும்பு, பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கார்ப்பரேஷனின் வேலை ஆரம்பமாகும். உதவி கிளை மனேஜர் அபிவிருத்தி அதிகாரி ஆகியோரின் கீழ் மாத்தறை, மட்டக்களப்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் மேலும் 5 உப கிளைகள் ஆரம்பிக்கப்படும் இவற்றின் நிலை உயரும் போது கிளைக் கந்தோர்களாக்கப்படும்.

### மணி வாக்கு

'இறைவனே! என்னிடம் தாழ்மையை வேண்டுகிறீர். ஆனால், நான் அந்த உயர்ந்த பொருளை இன்னும் எட்டவில்லை.'


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 18 உ (2-1-62)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## மனமாற்றமே தேவை

இலங்கை இந்தியர் பிரச்சினையை மத மாற்ற மூலம் தீர்க்கலாமென்று இரத்தினபுரியிலே ஒரு பௌத்த பிக்கு புதியதோர் யோசனையைக் கூறியிருக்கிறார். பெல்மதுளை எனுமிடத்தில் பௌத்த பிக்குகள் பயிற்சி நிலையமொன்று புதிதாகத் திறக்கப்பட்டிருக்கிறதாம். இந்தியாவிலிருந்து சில தமிழரை வரவழைத்து அவர்களுக்குப் பௌத்த சமயப் பயிற்சி அளித்து பிக்குகளாக்கி பின்னர் தோட்டப் பகுதிகளுக்கு அவர்களை அனுப்பி, மலைநாட்டில் வசிக்கும் இந்தியருக்கு பௌத்தத்தை போதித்து, அவர்களை பௌத்தர்களாக மாற்றுவதென்றும், மதம் மாறிய தமிழருக்கு பின்னர் பௌத்த பெயர்களைச் சூட்டி, பிரஜா உரிமை வழங்கிவிடலாமென்றும் இது இலங்கை இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க சிறந்ததோர் வழியென்றும் சொல்லுகின்றார் அவர்.

தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெறவேண்டுமென்ற ஆவலில், அந்த பிக்கு இந்த யோசனையைக் கூறியிருக்கலாம். ஆனாலும் அவர் கூறியுள்ள இந்த 'மத மாற்ற யோசனை பிரஜாஉரிமை பிரச்சினையைத் தீர்க்க ஓரளவும் உதவுமா என்பது மிகவும் சந்தேகம். ஏனெனில், தங்களது அடிப்படை மனித உரிமையைப் பெற, மலைநாட்டுத் தமிழர்கள், தாங்கள் வழி வழியாகப், பின்பற்றி வரும் ஒரு புனித சமயத்தை மாற்றிக் கொள்ளுவரென்று எதிர்பார்ப்பது முறையாகாது. மேலும், அப்படியே ஒருசிலர் மதம் மாறினாலும்கூட, அவர்களுக்கு பிரஜா உரிமை அளிக்க அரசியல் கட்சித் தலைவர்கள் சம்மதிப்பார்களா என்பது மிகவும் சந்தேகம்.

இலங்கை இந்தியர் விஷயம் ஒரு மனிதப்பிரச்சினை. மனிதாபிமானத்துடன் இதைத் தீர்க்கவேண்டியதாகும். புத்த பெருமான், 'மைத்திரி' அல்லது கருணையை போதித்தார். அந்த அன்புவழிதான் இன்பத்துக்கும் சாந்திக்கும் வழிகாட்டுமென்று, ரத்தினபுரியில் கூடிய பௌத்த காங்கிரஸில் தலைமை வகித்துப் பேசுகையில், சர்லலிதா ராஜபக்ஸ அறிவுறுத்தினர். இலங்கை இந்தியரும் மனிதர்களென்பதை மறக்காமல், அவர்கள்பாலும் அன்பு காட்டுவதாயின், இந்தப் பிரச்சினை வெகு சுலபமாகத் தீருவதாகும். இதற்கு மத மாற்றம் தேவையில்லை. மன மாற்றம் தான் வேண்டும். புத்தர் பெருமான் போதித்த கருணை வழியைப் பலரும் மறந்து விட்டதாலேயே இன்று நாட்டில் பல பல சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. புத்தரின் கருணை உபதேசத்தை நினைவுகூர்ந்து, மனம் மாறுவதாயின், இலங்கை இந்தியர் பிரச்சினை உள்ளிட்டு, பல சங்கடங்களும் எளிதில் தீருவதாகும்.

நற்குணமும் சீலமும் வாய்ந்த தலைவர்கள் இன்று இலங்கைக்குத் தேவையென்று அதே மகாநாட்டில் சர்லலிதா சரியாக அறிவுறுத்தினர்.

# கொந்தளிப்பான 1961ம்-ஆண்டு ஐ. நா. பொதுச்சபை

— லூயிஸ் ஹலஸா —

உலகைக்கொந்தளிப்புக்குள்ளாக்கிய சூழ்நிலைகளுக்கு மத்தியில் ஐ. நா. பொதுச்சபையில் 16-வது கூட்டத் தொடர் செப்டம்பர் 19-ந் திகதி முதல் நடைபெற்றிவிருக்கிறது. கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்னதாகச் சபை ஒத்திவைக்கப்பட்டபோது பொதுவாக உலக நெருக்கடி ஓரளவுக்கு தளர்ந்தது என்றே கூறலாம்.

ஐ. நா. வின் முன்னாள் பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்ட் காங்கோவில் சமரசப் பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென மறைந்த தருணத்தில் ஐ. நா. பொதுச்சபை ஆரம்பமாயிற்று. அத்தருணம் பேர்லின் நெருக்கடி உச்சக்கட்டத்திலிருந்தது. சோவியத் ரஷ்யா தொடர்ந்து பூதாகரமான அணு ஆயுத சோதனைகளை நடித்தியது. பொதுச்சபை ஒத்திவைக்கப்பட்டபோது ஐ. நா. அதன் தற்காலிக பொதுக்காரியதரிசியாக பர்மாவைச் சேர்ந்த யூதாண்டைப் பெற்றிருந்தது. பேர்லின் நெருக்கடியும் ஓரளவுக்கு தளர ஆரம்பித்தது. அடுத்த ஆண்டுக்கான கிழக்கு-மேற்கு பேச்சுவார்த்தைகளுக்கு ஆயத்தம் செய்வதற்கு மேனாட்டு வல்லரசுகள் தங்களின் முன்னோடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துவிட்டனர். சோவியத்தின் அணுஆயுதச் சோதனைகளும் நின்றன. அணு ஆயுதச் சோதனை தடுப்புக்கான ஜெனிவா மகாநாடும் தொடர்ந்து இயங்கஆரம்பித்தது. ஆயுதகளைவுக்கான பேச்சுவார்தையை நடத்தும் இயக்கங்களை நிறுவுவதில் சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தன.

எனினும், இன்னும் கவலைதரக்கூடிய விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

### பிரச்சினைகள்

ஐ. நா.வுக்கு மூன்று பொதுக்காரியதரிசிகள் தேவை என்ற கோரிக்கையை ரஷ்யா கைவிட்டாலும் ஐ. நா. வை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளை தற்காலிக பொதுக்காரியதரிசி சமாளித்து வருகின்றார். சோவியத் அணு ஆயுத சோதனைகள் நின்றுவிட்டன. ஆனால் ஜெனிவா பேச்சுவார்த்களில் ரஷ்யா நடந்துகொள்ளும் முறை, கிழக்கு - மேற்கு முகாம்களிடையே ஒப்பந்தம் ஏற்படும் சாத்தியத்தைக் குறைப்பதாக இருக்கிறது. அமெரிக்கா அதன் சொந்த அணு ஆயுதச் சோதனைகளை நடத்த ஆய்த்தம் செய்துகொண்டிருக்கிறது. மாஸ்கோ அணு சோதனையை மீண்டும் தொடங்குவதற்குரிய தனது உரிமைகளை "ரிசர்வ்" செய்து வைத்திருக்கிறது. கம்யூனிஸ்ட் சீனவை ஐ. நா. வுக்குள் சேர்ப்பது இவ்வாண்டிலும் தடைப்படுத்தப்பட்டது. ஆனல் 1962-ம் ஆண்டு நடைபெறும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் இது பெரிய பிரச்னையாகத் தொடரிலும் இது பெரிய பிரச்னையாகத் தோன்றும் அறிகுறிகள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுச்சபைக் கூட்டத்தொடர், கிறிஸ்மஸ் நேரத்தில் சம்பூர்ணமடைந்த தருணம் ஓரளவுக்கு அமைதியான சூழ்நிலைகள் ஏற்பட்டதுடன், கெடுபிடிகளும் தளர்ந்து காணப்பட்டன. ஐ. நா. கூட்டத்தொடரில் பலாபன்களே இதற்கு காரணம் என்று பல ராஜதந்திரிகள் கருதினர். சுமுகமாகத் தீர்வு செய்யப்பட்ட பிரச்சினைகளில் பிரதானமானது ஐ. நா. வுக்கு தற்காலிக பொதுக்காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யூதாண்ட் ஆகும். யூதாண்ட் நியமனத்திற்கு ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் பலத்த ஆதரவைக் கருத்திற் கொண்டு சோவியத் ரஷ்யா யூதாண்டுக்குப் பகிரங்கமாகச் சவால் விடுக்கவில்லை. எனினும் யூதாண்ட் விஷயத்தில் ரஷ்யாவின் போக்கு கடுமையாகவே இருக்கும் என்று பெரும்பான்மையான பார்வையாளர்கள் கருதுகின்றனர். ஐ. நா. பொதுச்சபை நிறைவேற்றிய ஏழு தீர்மானங்களின் வாயிலாக, சோவியத் ரஷ்யாவின் அணு சோதனைகளுக்குச் சர்வதேச ரீதியில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அவற்றில் இரண்டு தீர்மானங்கள் மேனாடுகள் தரப்பினுல் கொண்டுவரப்பட்டு பெருத்த ஆதரவின் நிறைவேறின.

சர்வதேச மேற்பார்வையில் அணுசோதனை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற மேனாடுகளின் இத்தீர்மானங்களில் ஒன்று. சோவியத்தின் போக்குக்கு உலக நாடுகள்காண்பித்த வெறுப்பை ரஷ்யா உணர்ந்து கொண்டதென்பது, ஜினிவா மகாநாட்டிற்கு மாஸ்கோ பிரதிநிதிகள் வருகை தந்ததின் மூலம் உணரப்பட்டது.

### ஆசியநாடுகள் திருப்தி

ஐ. நா. உறுப்பினர் எண்ணிக்கை விரிவடைந்திருப்பது ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அதிக திருப்தியையும், அந்தஸ்தையும் அளித்திருக்கிறது. 99 அங்கத்தின நாடுகளுடன் ஆரம்பமான ஐ. நா. பொதுச்சபைக்கூட்டம் கிறிஸ்மஸ் நேரத்தில் முடிவடைந்தபோது 104 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. புதிதாகச் சேர்ந்த நாடுகளில் ஆசியாவிலிருந்து மாரிட்டானியாவும் வெளி மங்கோலியாவும், ஆபிரிக்காவிலிருந்து சியாராலியோனும், தங்கனிகாவும் அடங்கியுள்ளன. ஐந்தாவது நாடு சிரியாவாகும். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள காலனித்துவ பிரச்சினைகளை ஐ. நா. பொதுச்சபை விவாதித்த விதம் பெரும்பான்மையான ஐ. நா. அங்கத்தினர்களுக்குத் திருப்தியைத் தந்திருந்தது. இவ்விஷயம் குறித்து ஏழு நகல் தீர்மானங்கள் தாக்கல் செய்யப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டன. காலனித்துவத்திலிருந்து விடுபட்டு வளர்ந்து வரும் சுதந்திர உணர்ச்சிகளைக் கவனித்து வருவதற்கு 17 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை நிறுவ வேண்டும் என்று கோரிய ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் பிரதான தீர்மானம் ஏகமனதானஆதரவைப்பெற்று நிறைவேறியது. பிரான்ஸ், பிரிட்டன், போர்ச்சுக்கல், ஸ்பெயின் ஆகிய நான்கு நாடுகள் மட்டுமேதான் இதற்கு வாக்களிக்காமல் மௌனம் சாதித்தன. சகல காலனித்துவ பிராந்தியங்களுக்கும்1963ம்ஆண்டுக்குள் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்ற ரஷ்யாவின் தீர்மானம் நிச்சயம் தோல்வியுறும் என்று உணரப்பட்டதால் அது ரஷ்யர்களால் வாபஸ்பெறப்பட்டது. காலனித்துவத்தை அசிய ஆபிரிக்கர்' வெறுப்பவர்களாயிருந்தாலும்தங்கள்பிரச்சினைகளில்அந்நியர் தலையிடுவதை ஏற்கமறுத்துவிட்டனர். தனது சொந்தகோரிக்கையை மீண்டும் கொணர ஆசிய ஆபிரிக்காநாடுகளின் பிரதான தீர்மானத்திற்கு திருதங்கள் ரூபத்தில் ரஷ்யா செய்த முயற்சி தோல்வியடைந்தது. அதற்கு ஆதரவான வாக்குகள் 19; எதிர்ப்பானவை46; நடுநிலைமை பானவை 36. இவ்வாண்டு இறுதிவரை காங்கோவில் பிரிவினைச் சக்திகளையும், காலனித்துவ ஊடுருவல்களையும் தீர்ந்துக்கட்ட ஐ. நா. தொடர்ந்து சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டதும்குறிப்பிடத்தக்கதாகும்.

---

இன்று புத்தர் பெருமான் கூறிய கருணையும் சீலமும் நமக்கு அதிகம் தேவை. நமது சமயத்தவர் பால் மட்டுமன்றி, எல்லா மக்கள் பாலும் அதை நாம் காட்டவேண்டும். அப்படியாயின், மத மாற்ற தேவை எதுவுமின்றி இலங்கை ஒன்றுபட்டு பல துறைகளிலும் சீரும் சிறப்புடனும் முன்னேறுமென்பதில் ஐயமில்லை.

# வேலைநிறுத்தத்துக்கு கல்லோயா தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

அம்பாறை, திங்கள்

"இன்று இந்தநாட்டில் நடைபெறும்வேலைநிறுத்தங்கள் தொழிலாளரின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்குக் கையாளப்படும் ஆயுதமன்று. ஒரு சில அரசியல்வாதிகள் இப்படியான வேலைநிறுத்த இயக்கத்துக்கு ஆதரவளித்து அதனுல் ஒரு பொருளாதார நெருக்கடியை உண்டுபண்ணித் தமது சொந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே வேலைநிறுத்த முயற்சிகளுக்கு ஆதரவுகொடுந்துவருகிறூர்கள்."

இவ்வாறு கல்லோயாப்பள்ளத்தாக்கைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் சில ஒன்றுகூடி விடுத்துள்ள அறிக்கையொன்று கூறுகின்றது.

சுதந்திரக்கட்சியின் கீழ் இருந்துவரும் கல் ஓயா சுதந்திர தொழிலாளர் சங்கம், ஸ்ரீலங்கர் சுதந்திரத்தொழிலாளர் சங்கம், கல் ஓயா நவடிருக்டேர்ஸ்சங்கம், ஸ்ரீலங்கா நிதகாயந்திரிக்க சேவகசமித்தி ஆகிய தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி விடுத்துள்ள இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"பொது வேலை நிறுத்தத்தின் போது, நாட்டிலுள்ள அத்தியாவசிய சேவைகளைச் சரிவர நடாத்துவதற்குத் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு வேண்டிய உதவியைச் செய்யும் என நாம் மனமார நம்புகிறோம். தொழிற்சங்க அங்கத்தவர்கள் தேசிய மனப்பான்மையுடன் நடந்துகொள்வார்கள் எனவும், ஆபத்துகள் எதுவும் நிகழாமல் நாட்டைப் பாதுகாத்து நாட்டின் நலனுக்காக உழைப்பார்கள் எனவும் எதிர்பார்க்கிறோம்.

"அரசாங்கத்தின் நிதி நிலைமைகள் மோசமாக இருக்கும் சமயத்தில் இப்பேற்பட்ட கோரிக்கைகளை அரசாங்கத்திடம் தொழிற்சங்கங்கள் விடுத்துள்ளதையிட்டு ஆச்சரியப்படுகிறோம். ஏற்கெனவே கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறூர்கள். ஏழைகள் மட்டுமன்றி நாட்டிலுள்ள அனைவருமே பாதிக்கப்படுவராகையால் வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கு ஆதரவு கொடுக்காதிருக்கும்படி பொதுமக்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

'எஸ். எல். எப். பியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துடன் ஒததுழைக்கவும், எவ்வித நிலைமையையும் சமாளிக்கவும்தயாராகவிருக்கிறோம்.'

## ஸ்டாலின் நூல்களுக்கு முக்கியத்துவம்

மாஸ்கோ, ஜன. 1

ஸ்டாலின் எழுதியுள்ள 'சோஷலிஸத்தின் அடிப்படைகள்'' மார்க்சிஸம் லெனினிஸமும் தேசியப்பிரச்சினை, என்ற நூல்களை சரியான சித்தாந்தத்தை வகுக்க உதவியாக வைத்துக்கொள்ள வேண்டும், புறக்கணிக்கக் கூடாது என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை 'பிராவ்டா' அறிவித்துள்ளது.

### ஜயாறன் எழுதுவது

வண்ணை வைதீச்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த 20 ஆசிரியர்கள், இந்தியாவிலே சுமார் 4 வாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறூர்கள்.

யாத்திரை எப்படி என்று ஓர் ஆசிரியரைக் கேட்டேன். வெகு சுகமென்றும், ராமேச்வரம், மதுரை, திருச்செந்தூர், சுசீந்திரம், குற்ருலம், மைசூர், பம்பாய் முதலிய பல இடங்களுக்கும் சென்றதாயும் ரயில் பிரயாணத்தைவிட, பஸ் பிரயாணமே மிக வசதி என்றும் சொன்னூர்.

"அங்கு பல இடங்களிலும் காங்கிரீட் ரஸ்தாக்கள், அதுபோல் இலங்கையில் எங்குமில்லை. பஸ்ஸில் அதிக ஆட்களை ஏற்றுவதில்லை. குறித்த நேரத்துக்கு டாண் என்று புறப்படுகிறது. சின்னஊரிலும் நல்ல ஹோட்டல்களுண்டு. உணவு வெல்லம் மிக மலிவு. ஆனல் தமிழ் நாட்டிலும் ஹோட்டல்களில் வாழை இலை மறைந்து எல்லாம் பிளேட்டும் கப்புமாகக் காட்சிஅளிக்கிறது. அது ஒன்றுதான் மனதுக்குப் பிடிக்கவில்லை" என்றூர் அவர்.

கோவில்களைப்பற்றி கேட்டதற்கு மதுரை, சிதம்பரம் கோவில்கள் மிகச் சிறப்பாக இருப்பதாயும், ஆனல் தஞ்சாவூர், காஞ்சீபுரம் இக்கோவில்கள் சரிவர நிர்வகிக்கப்படுவதாகத் தெரியவில்லை என்றும் சொன்னூர்.

ஆறு வருடங்களுக்கு முன் தாம் பார்த்ததைவிட, இப்போது இந்தியாவில் வெகு திருத்தமென்றும், கைத்தொழில், பொருளாதாரம் மிக முன்னேறி இருப்பதாயும்,தெரிவித்தார்.

இப்பிரயாணத்தில் ஏதும் சங்கடங்களுண்டா என்று கேட்டதற்கு, இங்கு கொழும்பிலே பாஸ்போட் எக்சேஞ்ச் எடுப்பதற்குத்தான் மிகச் சங்கடமாகி விட்டதாயும், பல முறை கொழும்புக்குச் செல்ல நேரிட்டதென்றும், பல குட்டி தேவதைகளும் வீன் இம்சை செய்வதாயும், இதைத் தவிர தங்களுக்கு இப்பிரயாணத்தில் வேறு எவ்வித கஷ்டமுமில்லை என்றூர். இந்திய ஹைகமிஷன் ஒரு சில மணி நேரததில் விஸா கொடுத்துவிட்டதாம்.

இரு அரசாங்கங்களும் நேரில் கலந்து பேசி, இப்பிரயாண சங்கடங்களை குறைக்க ஏதும் செய்ய முடியாதா? இல்லாவிடில் இரு தேச நட்புறவால் என்ன பயன்?

* * *

தமிழ் நாட்டுக்குச் சென்று 3மாதம் தங்கிவிட்டு ஓர் அன்பர் யாழ்ப்பாணம் திரும்பினர். அங்கு பயிர் பச்சையெல்லாம் மிகச் செழிப்பாம். அப்படியானல் ஏன் கள்ளத்தோணிகளில் இங்கு வருகிறூர்கள் என்று கேட்டதற்கு, தடையின்றி கள்ளு சாராயம் குடிப்பதற்குத் தான் பலரும் ஆவலுடன் வருவதாயும், இந்தியாவில் அதிக பிழைப்புக்கு வழி இருப்பதாயும் தெரிவித்தார்.

அந்த அன்பர் இந்தியாவில் குடும்பத்தைவிட்டுவிட்டு இங்கு தொழில்செய்யவந்தவர். போன ஜன்மத்தில் எந்தக் குடும்பத்தையும் பிரித்தேனே, அந்தப் பாவம், இப்போது என்னை பிரித்து வைத்துள்ளதென்று கூறினர்.

---

லண்டன், ஜன. 1

அடுத்த வியாழக்கிழமை ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளின் அமைச்சர் குழு நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

# அடையாள வேலைநிறுத்தம்

## இ. தொ. கா. பங்குபற்றும்

நுவரெலியா, திங்கள்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயல் கமிட்டி கொழும்பில் கூடிய கூட்டமொன்றில், தொழிலாளர்கள் அனைவரையும் வேலைநிறுத்தம் செய்யும்படி கேட்டுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பேரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து தோட்டக் கமிட்டிகள் அனைத்துக்கும் செயல் கமிட்டி சற்றறிக்கையொன்றை விடுத்துள்ளது. வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு காட்டுமுகமாக ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறு இச்சுற்றறிக்கையால் தொழிலாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

நுவரெலியாப் பகுதியிலிருந்து சுமார் 45,000 தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளுவார்கள் எனத் தெரிகிறது.

## ஐக்கிய இடதுசாரி முன்னணி உருவாக்க 3 கட்சிகள் முயற்சி

கொழும்பு, திங்கள்

லங்கா சமசமாஜக் கட்சியும் மக்கள் முன்னணிக் கட்சியும், கம்யூனிஷ்ட் கட்சியும் ஒன்றுகூடி ஒரு ஐக்கிய இடதுசாரி முன்னணியை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை இம்மூன்று கட்சிகளும் கடந்த இரண்டு வாரங்களாகத் தம்மிடையே நடாத்தி வருகின்றன. எம். ஈ. பி. யைச் சேர்ந்த திரு. பி எச். வில்லியம் சில்வா, செனட்டர் ரெஜி பெரேரா ஆகியவர்கள் இந்த விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்கள் எனத்தெரிகிறது.

எம். ஈ. பி. யும் எல். எஸ். எஸ. பி. யும் இந்தவிஷயம் பற்றி அதிக நம்பிக்கையுடன் முயற்சித்துவருவதாகத் தெரிகிறது.

ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்குவதில் இருகட்சிகளும் வெகு ஆவலாக இருக்கின்றன என்றும், அவ்வாறு ஒரு முன்னணியை உருவாக்க இருகட்சிகளும் மனதாரவிரும்புகின்றன என எல். எஸ்.எஸ. பி. தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறியுள்ளதாகத் தெரிகிறது.

இருகட்சிகளும் சேர்ந்து ஒரு முன்னணியை ஏற்படுத்த முடியும் என எம். ஈ. பி. வட்டாரங்கள் கூறியுள்ளன. முன்னேற்றவாதிகளிடையே ஐக்கியமுண்டாவதற்கு எல். எஸ. எஸ. பி. யும் கம்யூனிஸட்கட்சியும் உதவி செய்யலாம் என்று எம். ஈ. பி. தலைவர் திரு. குணவர்த்தன கடந்தவாரம் நடைபெற்ற எம். ஈ. பி. மகாநாட்டில் யோசனைகூறியதன்பேரில் கட்சிகளிடையே புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எல். எஸ். எஸ். பி. யும் எம். ஈ. பி. யும் தம்மிடையேயுள்ள பேதங்களைக் குறைத்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

---

தொழில் என்பதை நீங்கள் எப்பொழுதும் மனதில் வைத்திருக்கவேண்டும்.

டாக்டர் கருணரத்ன, சுகாதாரப் பகுதி சேவையாளருக்கு விடுத்த புதுவருடச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

"உங்கள் மீது நான் மிகவும் நம்பிக்கை வைத்துள்ளேன். வேலைகள் துரிதமாக அதிகரித்துக்கொண்டு வந்தபோதிலும் வைத்தியத் துறையில் சேவையாளர் தொகை குறைவாக இருந்தபோதும், நீங்கள் அயராது உழைத்து வருகிறீர்கள், உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப நீங்கள் கடமையைச் செய்து வந்திருக்கிறீர்கள்"

## குன்றக்குடி அடிகளார் இலங்கை வருகிறார்

கிளிநொச்சி, திங்கள்

திருவண்ணாமலை ஆதீனத்து மகா சந்நிதானம் தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் எதிரே வரும் பிப்ரவரி 9, 10, 11-ம் திகதிகளில் கொழும்பு விவேகானந்த சபையார் நடாத்தவிருக்கும் திருமுறை விழாவில் கலந்துகொள்வதற்காக இங்கு வருகிறார்.

தவத்திரு அடிகளார் மலைநாடு, மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் எழுந்தருள வேண்டும் என்ற வேண்டுகோள் குன்றக்குடியில் உள்ள அருள்நெறித் திருக்கூட்ட தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தவத்திரு அடிகளார் இலங்கை அருள்நெறித் திருக்கூட்ட ஊழியர்கள், அன்பர்கள் கூட்டமொன்றில் கலந்து இலங்கையில் செய்யவேண்டிய பணிகளைப்பற்றி ஆணையிடுவார்கள். அதற்கான ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு சர்வோதய மண்டல காரியதரிசி இலங்கை விஜயம்

யாழ்ப்பாணம், திங்கள்

லெபனன் என்ற அரபு நாட்டிலுள்ள பெய்ருட்டில் நடைபெற்ற அகில உலக சாந்தி சேனை அமைப்பு மகாநாட்டில் கலந்துகொள்ள சென்றிருக்கும் தமிழ் நாடு சர்வோதய மண்டல காரியதரிசி திரு. ச. ஜெகநாதன் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு விஜயஞ் செய்கிறார்.

தமிழ் நாட்டில் இருந்து செல்லும் திரு. ச.ஜெகந்நாதன் குறித்த மகா நாட்டில் பங்கெடுத்த பின்னர் சைப்பிறஸ், இஸ்ரேல், கிரீஸ், சிசிலி, இத்தாலி, யூகோஸ்லேவியா, பிரான்ஸ், பிரிட்டன், போலந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் சுமார் 5 மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்து அங்குள்ள சமுதாய நிலைகளை நேரில் கண்டறிவார். 1962 ஜூன் மாதம் தமிழ்நாடு திரும்புவார் எனத் தெரிகின்றது.

திரு. ஜெகந்நாதன் 1962 ஆகஸ்ட் வரையில் இலங்கைக்கு விஜயம் செய்வார் எனவும் தெரிகின்றது.

## ரயில்வே எஞ்சின் சாரதிகள் கலந்து கொள்வர்

கொழும்பு, திங்கள்

ஜனவரி 5-ம் திகதி நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்தில் ரயில்வே என்ஜின் சாரதிகள் சங்கமும் பங்கு பற்றும்.

ரயில்வே எஞ்சின் சாரதிகள் சங்கம் கீழ்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது எனச் சங்கத் தலைவர் திரு. எல். கே. ஜீ. பீரிஸ்ஸும், பொதுக் காரியதரிசி திரு. எஸ். ஜயசிங்காவும் கூறியுள்ளார்கள்.

"ஜனவரி 5ந் திகதி நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்தில் ரயில்வே எஞ்சின் சாரதிகள் சங்கமும் கலந்து கொள்ளும். ஏனைய தொழிற் சங்கங்களுக்கு அனுதாபம் காட்டு முகமாகவும், அரசாங்கத்தின் பாராமுகமான கொள்கைக்கு எதிர்ப்புக்காட்டு முகமாகவுமே எமது தொழிற் சங்கம் பொது வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்கிறது."

## பகவத்கீதை

ஸ்டட்கார்ட், ஜன. 1

கிறிஸ்துமஸ் சமயத்தில் பரிசாக வழங்கப்படுவதற்காகவே பகவத்கீதையை ஜெர்மன் மொழியில் ஒரு அழகான புஸ்தகமாக ஹான்ஸ் குயேந்தரின் அச்சகம் வெளியிட்டுள்ளது.

## பொறுக்க முடியவில்லை!

இவான்ஸ்வில்லி, டிச. 31

தான் இறக்கும்போது தனது ஆயுள் இன்ஷூரன்ஸ் பணம் தனது நண்பரொருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என 81 வயதான ஒரு தொழிலாளி எழுதிவைத்திருந்தார். ஆனல் இவர் இறக்கும் வரைக்கும் இவரது நண்பரால் பொறுக்க முடியவில்லை. அவசரமாகப் பணம் தேவையாயிருந்தது அவருக்கு.

உடனே நஞ்சுதோய்த்த இனிப்புக்கள் சிலவற்றைத் தனது நண்பருக்கு அனுப்பி வைத்தார். நஞ்சு தனது வேலையை முடித்ததும் இவருக்கு இன்ஷூரன்ஸ் பணம் கிடைக்குமல்லவா?

ஆனல் திட்டம் சரிவரவில்லை. அதற்குள் பொலிசார் இவரைக் கைது செய்து நஞ்சூட்டிக் கொலை செய்ய முயற்சித்ததாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.

மேற்படி சம்பவம் அமெரிக்காவில் இந்தியானா மாகாணத்தில் உள்ள இவான்ஸ்வில்லி எனும் ஊரில் நடந்தது.

## தாய் மகனைக் கத்தியால் குத்தினர்

### அபராதம் ரூ. 40

கொழும்பு, திங்கள்

"உமது மகனை நீரே வெட்டுத்துண்டு போட்டுவிட முடியாது. உமது பிள்ளையைத் திருத்த முடியாவிட்டால் அதற்கு நீரே பாத்திரவாளி நீரே. பிள்ளைகளைச் சரியான முறையில் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பது பெற்றோர்களுக்குத் தெரியவேண்டும்".

பத்மசிறி என்னும் ஒன்பது வயதுச் சிறுவனைக் கத்தியால் குத்தியதாக அவரது தாயார் டபிள்யு. ஏ. பிரேமாவதி மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிவில் கொழும்பு மாஜிஸ்ரேட் திரு. என். ஜே. வி. கூறே இவ்வாறு கூறினர்.

அயல் வீட்டாரின் தோட்டத்தில் பத்மசிறி திருட்டுத்தனமாக வாழை இலை வெட்டி வந்தாராம் அவ்வாறு செய்ய வேண்டாம் எனப் பல தடவைகள் பத்மசிறியின் தாயார் அவருக்குக் கூறியிருந்தார். சம்பவம் நிகழ்ந்த அன்று பத்மசிறி பக்கத்து வீட்டார் தோட்டத்துக்குச் சென்று வாழைஇலை வெட்டி வந்தாராம். வாழைத் தோட்டக்காரர் திட்டியது பத்மசிறியின் தாயார் காதில் விழவே, அவர் வெளியே சென்று தனது கையில் இருந்த சிறுகத்தியினல் தனது மகனுக்குக் குத்தினராம்.

பிரேமாவதி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். தாம் அதிகம் உணர்ச்சி வசப்பட்டிருந்ததால் மேற்படி குற்றத்தைத் தாம் செய்தார் எனவும் கூறினர்.

40 ரூபாய் அபராதம் செலுத்தும்படி மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்.

## இலட்சுமிதோட்ட விசாரணை 15ம் திகதி தொகுப்புரை

கொழும்பு, திங்கள்

இலட்சுமிதோட்ட விசாரணை சம்பந்தமான தொகுப்புரையை இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆஜரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஜனவரி 15ம் திகதி கமிஷனர் முன் சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது.

## ஆசிரியர்களை உதவுமாறு அமெரிக்காவை இலங்கை கோருகிறது

கொழும்பு, திங்கள்

பள்ளிக்கூடங்களில், விஞ்ஞானம், வீட்டுப்பணி, சுகாதாரம், தேகப்பயிற்சி ஆகிய துறைகளில் மாணவருக்குப் பயிற்சியளிப்பதற்கு ஆசிரியர்களை உதவுமாறு அமெரிக்க சமாதான தொண்டர்படையிடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

அமெரிக்க சமாதான தொண்டர் படையின் உதவி பெற வேண்டும் எனக் கல்வி இலாகா கோரியதன் பேரிலேயே அமெரிக்க அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் பிரஸ்தாப உதவியைக் கேட்டுள்ளது.

விஞ்ஞான பாடத்தில் பயிற்சியளிக்கச் சுமார் 20 ஆசிரியர்களும், சுகாதார தேக பயிற்சித் துறைகளுக்கு 18 ஆசிரியர்களும், வீட்டுப்பணி சமையல் முதலியபாடங்களுக்கு 4 ஆசிரியர்களும் தேவைப்படுவதாக அரசாங்க வட்டார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜீ. சி. ஈ., எச். எஸ். சி. வகுப்புக்களுக்கே விஞ்ஞான ஆசிரியர்கள் பயிற்சியளிக்கத் தேவைப்படுகிறார்களாகையினல் கணித பாடத்திலும் பௌதிக பாடத்திலும் பட்டம் பெற்றவர்களும் ஆராய்ச்சி வேலைகளில் அனுபவம் மிக்கவருமே விஞ்ஞான ஆசிரியர்களாக வரவழைக்கப்படுவர்.

கல்விப் பகுதி எஞ்ஜினியரிங் கிளையில் வேலைபார்ப்பதற்கென அமெரிக்க சமாதான தொண்டர் படையிலிருந்து இரண்டு எஞ்ஜினியர்களும் இங்கு வரவழைக்கப்படவிருக்கிறார்கள்.

## வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்க கவுன்சிலுக்கதிகாரம்

### அப்போதிக்கரிமார் சங்கம் முடிவு

கொழும்பு, திங்கள்

அரசாங்க அப்போதிக்கரிமாரும், மருந்துக் கலவையாளர்களும் வேலை நிறுத்தம் செய்வதென இறுதியாகத் தீர்மானித்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அரசாங்க அப்போதிக்கரிமார், மருந்துக்கலவையாளர் சங்க இணைக்காரியதரிசிகளால் நேற்றிரவு வெளியிடப்பட்ட அறிக்கை பின்வருமாறு:

"வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் இன்று நடந்த எமது சங்கங்களின் விசேஷ கூட்டத்தில் நமது நீண்ட நாளைய கோரிக்கைகளைப் பெறும்பொருட்டு வேலை நிறுத்தத்தில் இறங்குவதென தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் மேற்படி கூட்டத்தில் வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கும் முடிக்கும் திகதிகளை நிர்ணயிப்பதற்கான அதிகாரம் எமது சங்கத்தின் கூட்டுக் கவுன்சிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 720 பேர் குளிருக்குப் பலி

லக்னேவ், டிச. 31

கடந்த இருவாரகாலமாக வட இந்தியாவில் பரவி வரும் கடுமையான குளிர்காரணமாக இதுவரை 720க்கு மேற்பட்டவர்கள் இறந்துவிட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

உத்தரபிரதேசம், பிகார் ஆகிய பகுதிகளே குளிரினல் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளவெனவும், உத்தரபிரதேசத்தில் 11 ஆயிரத்துக்கு மேற்பட்டகால் நடைகள் குளிரினல் உயிரிழந்தனவெனவும் அறிவிக்கப்படுகிறது.

## குழந்தைகளுக்குப் பயிற்சி

### சென்னை அரசினர் திட்டம்

கோயம்புத்தூர், ஜன. 1

குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதற்கு முன்னர் அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசினர் உருவாக்கியுள்ளதாகத் தமிழக நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் இங்கு நடைபெற்ற குழற்குழுக் கூட்டம் ஒன்றிற் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் அதிகசதவீதம் குழந்தைகள் தேர்வில் வெற்றி பெறுகின்றனர். ஆனல் நம் நாட்டிலோ 50 சத வீதத்துக்கும் அதிகமான குழந்தைகள் தேர்வில் தோல்வியுறுகின்றனர். வெளிநாடுகளிற் பள்ளிக்கூடம் செல்வதற்கு முன்னர் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆனல் இங்கு பள்ளிக் கூடங்களிற் சேரும்போதுதான் குழந்தைகள் கற்பிக்கப்படுகின்றனர்.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதற்கு முன்னர் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படாததால் அவர்கள் ஒழுங்குமுறையினையும் முறையான கல்வியினையும் பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் ஆகிவிடுகிறது.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதற்கு முன்பு பயிற்சி வசதி அளிக்கப்படாவிட்டால், அவர்களைச் சிறுவயதிலேயே பள்ளிக்கூடங்களிற் சேர்த்து அங்கு அவர்கள் சில பயிற்சிவகைகளைப் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கலாம்.

## அரசாங்கத்துக்கு இருபுறத்திலும் இடி

### —வர்த்தக மந்திரி

கம்பளை, திங்கள்

"அரசாங்கம் இரண்டு எதிரிகளுடன் போராட வேண்டியிருக்கிறது. ஒன்று, தினமும் அதிகரித்துக்கொண்டு போகும் வாழ்க்கைச் செலவு. மற்றையது அரசாங்கத்தின் முன்னேற்றக் கொள்கைகளை முறியடிக்க முனையும் அரசாங்க அதிகாரிகள் சிலரின் சதித் திட்டங்கள்".

இவ்வாறு வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின வாதுமுல்லாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற் பேசும்போது குறிப்பிட்டார்.

## இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியருக்கு சலுகை

புதுடில்லி, ஜன. 1

இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து வரும் இந்தியப் பிரஜைகளுக்கு அரசாங்க உத்தியோகங்களுக்கு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் மற்ற ஸ்தாபனங்களும் நடாத்தும் போட்டிப் பரீட்சைகளுக்கு வயது வரம்பை இந்திய அரசினர் மூன்று வருடங்கள் தளர்த்தத் தீர்மானித்துள்ளனர்.

ஆனல் இராணுவ உத்தியோகங்களுக்கு இந்தச் சலுகை கிடையாது. இடம் பெயர்ந்தோர் என்பதற்கு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனரிடமிருந்து அத்தாட்சி வாங்கி வந்திருக்க வேண்டும். 1964 டிசம்பர்வரை 3 வருடங்களுக்கு இச்சலுகை வழங்கப்பெறும்.

## ஆசிரியர்களின் சம்பளவிகிதம்

### கமிஷன் நியமிக்க கோரிக்கை

திருவனந்தபுரம், ஜன. 1

ஆசிரியர்களின் சம்பளவிகிதம் பற்றி சம்பளக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று திருவனந்தபுரத்தில் நேற்று முடிவடைந்த அகிலபாரத் ஆசிரியர்சங்கத்தின் 36-வது வருடாந்த மகாநாட்டில் நிறைவேறியது.

நாடு முழுவதற்கும் ஏற்ற வகையில் கல்வி விடுமுறையை மாற்றவேண்டுமெனக் கோரும் ஒரு தீர்மானமும் மகாநாட்டில் நிறைவேறியது.

## பீரட்டில் புரட்சி

பீரட், டிச. 31

லெபனுன் தலைநகர் பீரட்டில் அரசாங்கத்திற்கெதிராக நடைபெற்ற புரட்சி ஒன்று அடக்கப்பட்டு விட்டதாய் அறிவிக்கப் படுகிறது.

## அல்ஜீரியா இரண்டாகும்?

பாரிஸ், டிச. 31

அல்ஜீரியா சுயநிர்ணயம் சம்பந்தமாக தேசியத்தலைவர்கள் ஒரு உடன்பாட்டுக்குவராவிட்டால் தற்காலிகமாக நாட்டை இரு கூறுகளாக்குவதென பிரான்ஸ் முடிவு செய்துள்ளதாய்த் தெரிகிறது. 1962-ம் ஆண்டு அல்ஜீரியாவிலிருந்து பெரும்பகுதி பிரெஞ்சுப்படைகள் திருப்பியழைக்கப்படுமென ஜெனரல் டிகால் கூறினர். அல்ஜீரியாவில் நிலைமை மோசமாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது

## ஆண் நோயாளர்களைவிட பெண் நோயாளர் அதிகம்

### சுகாதார இலாகா தரும் தகவல்

கொழும்பு, திங்கள்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொரு வருடமும் ஆண் நோயாளர்களை விட பெண் நோயாளர்களே அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆண் நோயாளர்களை விட பெண் நோயாளர்கள் சராசரி 1,000 பேர் கூடியுள்ளதாக சமீபத்தில் சுகாதார இலாகாவினால் எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி தெரியவருகிறது.

சென்ற வருடம் செப்டம்பர் மாதத்தில் 16,212 பெண் நோயாளர்களும் 15,414 ஆண் நோயாளர்களும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என சுகாதார இலாகா தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## மாணவர்களிடம் வேலைவாங்கும் ஆசிரியர்கள்மீது நடவடிக்கை

கொழும்பு, திங்கள்.

பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டு சில ஆசிரியர்கள் தமது சொந்த வேலைகளையும் செய்விக்கின்றனர் என்று பெற்ருேர்கள் சிலர் முறையிட்டதன் பேரில், கல்வி இலாகா ஒரு புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளது.

"பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டு தமது சொந்த வேலைகளைச் செய்விக்கும் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்" எனக் கல்வி இலாகா ஒரு புதிய சட்டத்தை வகுத்துள்ளது.

சில ஆசிரியர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளைக் கொண்டு தமது சொந்த கருமங்களைச் செய்கின்றனர் எனப் பெற்ருேர் கல்வி இலாகாவுக்கு முறையிட்டதாக கல்வி இலாகா அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக ஆசிரியர்களிடையே இந்தப் பழக்கம் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. வார இறுதி நாட்களில் தமது பொருள்களை வாங்குவதற்கு ஆசிரியர்கள் மாணவர்களைச் சந்தைக்கு அனுப்புகிருர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. சில ஆசிரியர்கள் தமது தோட்டங்களுக்குத் தண்ணீர் ஊற்றும் வேலைகளை மாணவர்களைக் கொண்டு செய்விக்கிருர்களாம்.

இந்தப் பழக்கங்கள் ஆசிரியர்களிடையே பழம்பாடமாகி விட்டன என்றும் மாணவர்கள் தமது வேலைகளைச் செய்வதற்குத் தமக்கு உரிமை உண்டு எனச் சில ஆசிரியர்கள் கருதுகின்ருர்கள் என்றும் கல்வி இலாகா அதிகாரி கூறியுள்ளார்.

## கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்

### மந்திரி ஆரம்பித்து வைப்பார்

கொழும்பு, திங்கள்

அரசாங்க கார்ப்பரேஷன்களில் வேலை பார்க்கும் அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்குவதற்கான திட்டமொன்றை கைத் தொழில் உள்நாட்டுக் கலாச்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா வெகு விரைவில் ஆரம்பித்து வைப்பார்.

அரசாங்க கார்ப்பரேஷன் அனைத்தையும் புனருத்தாரணம் செய்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதன் பேரில் கைத்தொழில் அமைச்சர் பிரஸ்தாப திட்டத்தை ஆரம்பித்துவைக்க விருக்கிருர். கார்ப்பரேஷனின் வெவ்வேறு துறைகளில் உள்ள சேவையாளருக்குப் போதிய பயிற்சியில்லாத காரணத்தினுல்தான் கார்ப்பரேஷன் வேலைகள் சரியாக நடப்பதில்லை என கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கென சர்வதேச தொழில் ஸ்தாபன நிபுணர் ஒருவரின் உதவியுடன் கார்ப்பரேஷன் சேவையாளருக்கான பயிற்சி வழங்கப்படவிருக்கிறது.

பயிற்சித் திட்டத்தின் கீழ், கார்ப்பரேசனைச்சேர்ந்தசேவையாளர்கள் இந்தியாவுக்கும் இரண்டு அல்லது மூன்று மாதப் பயிற்சிக்கு அனுப்பப்படுவர். இந்தியாவிலுள்ள கைத் தொழில் திட்டங்களையும் தொழிற் சாலைகளையும் இவர்கள் பார்வையிடுவர். இந்திய அரசாங்கத்துடன், இவர்கள் பயிற்சிக்கான ஒழுங்குகளை இலங்கை அரசாங்கம் செய்து வருகிறது.

## கல்லோயாவிலுள்ள சுதந்திரக்கட்சி யூனியன்கள்

### அரசாங்கத்துக்கு ஆதரவு

அம்பாறை, ஞாயிறு

கல்லோயா பள்ளத்தாக்கிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தொழிற் சங்கக்கிளை சேர்ந்த ஊழியர்கள் தாங்க வேலைநிறுத்தங்களில் கலந் கொள்ளப் போவதில் யென்றும் அரசாங்கத்துக் விசுவாசம் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளனர்.

இன்று நடைபெறும் வேலை நிறுத்தங்கள் தொழிலாளர் வின் நலவுரிமையைப் பேணு வதற் கல்லவென்றும் சி இந்த யூனியன்கள் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளன.

நூலகளை சிரியரின் சித்தாந்தத்தை வகுக்க உதவியாக வைத்துக்கொள்ள வேண்டும். புறக்கணிக்கக் கூடாது என்று [illegible] பாவம், இப்போது என்னை பிரித்து வைத்துள்ளதென்று கூறினர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை 'பிராவ்டா' அறிவித்துள்ளது.

லண்டன், ஜன. 1

அடுத்த வியாழக்கிழமை ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளின் அமைச்சர் குழு நடைபெறும் என அறிவிக்கப் படுகிறது.




குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூடத்தான் ஸல்லை ஆவலோடு எதிர்நோக்குகிருர்கள். ஸல்லுக்கு பாலாடையின் அரும் சுவையும் தெவிட்டாத தித்திப்புமே இதற்குக் காரணம்! அதைத் தனிப் பால் பானமாகப் பருகி மகிழுங்கள் அல்லது டீயிலோ, கோப்பியிலோ, பாலுக்குப் பதில் சேர்த்துக்கொண்டு, அவற்றின் சுவையை அதிகரிக்கச் செய்யுங்கள். ஸல் உடன் கரைந்துவிடுகிறது.

ஸல்லைப் பாவிப்பதால் பணம் மிச்சமாகும். அதன் விலை சாதாரண மோல்டட் பாலை விட அதிகமில்லை. மேலும் அது பால் மற்றும் சீனியின் செலவைக் குறைக்கும்! இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் [illegible] சென்று உங்கள் குடும்பத்தாரின் முகங்கள் மலருவதைக் காணுங்கள்!

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

ஸல்—குடும்பத்தார் உடன் விரும்புவது

JWT-HLS 2984

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுகிறது

## குழந்தை மாயமாய் மறைந்தது!

### ஆஸ்பத்திரியில் சம்பவம்

கடலூர், டிச. 29

திருப்பாதிரிப்புலியூர்குப்பன் குழத்தை சேர்ந்த சுப்பிரமணியனின் மனைவி ராஜாமணியின் மூன்று நாளைய ஆண் குழந்தை கடலூர் அரசாங் தலைமை ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதியின்று காணமற் போன கிடைத்துள்ளது..

சுமார் 23 வயதுடைய அப்பெண் மூன்ருவது பிரசவத்துக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு டிசம்பர் 17ல் ஆண்மகனைப் பெற்ருர். ஆனல் தாயுடன் படுக்கையில் இருந்த சுசய்மட்டும் 20-ந் திகதி இரவு மோர் இரண்டு மணிக்கு மாயமாய் மறைந்ததாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாகப் பொலிஸ் துப்பறியும் நாய் கொண்டுவரப்பட்டு தேடியும் யாதொரு பலனும் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது.

## இரகசிய சுற்றறிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

அரசாங்க அப்போதிக்கரிமாரும் மருந்து கலக்கும் ஊழியரும் எந்த நிமிடமும் வேலை நிறுத்தஞ் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்.

இவ்வாறு இன்று வடமராட்சியிலுள்ள சகல அப்போதிக்கரிமாருக்கும் மருந்து கலக்கும் ஊழியருக்கும் அனுப்பப்பட்டுள்ள ஓர் சுற்றறிக்கை கூறுகிறது.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D

## நல்ல படைப்புக்களை வெளியிட ஆதரவு தரவேண்டும்

— டாக்டர் நந்தி

நாவலப்பிட்டி, திங்கள்

"பணவசதி இல்லாத காரணத்தால் சில நல்ல படைப்புக்கள் குடிசைகளில் மறைந்து கிடக்கின்றன. பிரஜா உரிமையற்ற மக்களைப்போல் அலை ஓங்குகின்றன. இதே நேரத்தில் மூன்ருந்தரப் படைப்புக்கள் மக்கள் மத்தியில் உலாவுகின்றன. நல்ல படைப்புக்களை முற்பணம் கொடுத்து அச்சிடுவதன் மூலம் இந்த நிலையைச் சீர் செய்யலாம்" என நாவலப்பிட்டி ஆத்ம ஜோதியில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் சிறுகதை எழுத்தாளரும் தமிழ் புத்தக வெளியிட்டுக் கழகத்தின் செயலாளருமான டாக்டர் நந்தி குறிப்பிட்டார்.

டாக்டர் நந்தி மேலும் பேசியதாவது:-

புதிய மருந்துவகைகளை டாக்டர்களுக்கு அவ்வப்போது அறிமுகம் செய்து வைக்கும் மருந்து உற்பத்தியாளரின் உபாயத்தை அறிந்திருப்பீர்கள். தமிழில் வெளிவரும் புதிய படைப்புக்களை இவ்விதம் உடனுக்குடன் சிறு பிரசுரங்கள் மூலம் அறிமுகம் செய்து வைப்பது சில காலத்துக்கு அவசியமாகின்றது.

சமீபத்தில் ஆத்ம ஜோதி வெளியிட்ட ஒரு புத்தகத்துக்கு புது வருடத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு அறிமுக விழா நடத்த இருப்பதாகவும் கழகம் ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிட இருப்பதாகவும் டாக்டர் நந்தி தெரிவித்தார்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய் 2-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 8-00 வவனின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-45 தேர்ந்தஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'திசை கடந்த இசை', 9-45 எம். இராமையா—நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச் குறிப்புகள், 7-30மதுரை சரஸ்வதி லட்சமணன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 கதம்பம், 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இசைவிழா—சென்னை அஞ்சல், 9-15 'பசி'—நாடகம், 9-30 இசைவிழா—சென்னை அஞ்சல்.

## தமிழ் ஆசிரியை வேண்டாம் என்ருர்!

### எம். பி. தகவல்

முள்ளியவளை, திங்கள்

"பெற்ருரும் ஆசிரியருமாகிய உங்களின் வேண்டுகோளின் பேரிலேயே, உங்கள் பிள்ளைகளின் நலன் கருதி, பயிற்றப்பட்ட தமிழாசிரியை ஒருவரை உங்கள் பாடசாலைக்கு நியமிப்பதற்குச் சிரமப்பட்டு முயன்றுழைத்தேன். அது கைகூடும் தருணத்தில், உங்கள் பெ. ஆ. சங்கக் காரியதரிசி, "தமிழாசிரியை வேண்டாம்" எனத் தந்தி மூலம் எதிர்ப்புத் தெரிவித்தமையால், தமிழாசிரியையின் நியமனம் நிறுத்தப்பட்டுவிட்டது."

தண்ணீருற்று அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவொன்று, தலைமையாசிரியர் ஜனுப் அ. செ. முகமது தலைமையில், வவனியாப் பிரதிநிதி திரு.தா. சிவசிதம்பரத்தை சந்தித்துத் தங்கள் பாடசாலையில் 130க்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளுக்குத் தராதரப் பத்திரமற்ற ஓர் ஆசிரியை மட்டும் கல்வி புகட்டுவதாகவும், தாங்கள் முன்பு வேண்டிக்கொண்டபடி, பயிற்றப்பட்ட தமிழாசிரியை இன்னும் நியமிக்கப்படவில்லை எனவும் முறையிட்டபோது, வவனியாப் பிரதிநிதி மேற்கண்டவாறு வருத்தம் தெரிவித்தார்.

தங்களுக்குத் தெரியாமலே, காரியதரிசி, தந்தியடித்துவிட்டதாகத் தலைவர் குறிப்பிட்டு, அதுபற்றி விசாரிப்பதாகவும் கூறினர்.

## ஷாப்புச் சட்டம் பற்றி புகார்

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டைவேலிக் கிராமசபை தனது அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் வெள்ளிக்கிழமைகளில் ஷாப்புச் சட்டத்தை அமுல்நடத்துவதன் விளைவாக அந்நாட்களில் நெல்லியடியிலுள்ள சில சவரச் சலூன்களில் முடிவெட்ட ரூபா ஒன்றும் முகச்சவரஞ் செய்ய 50 சதமும் அறவிடப்படுவதாக பாதிக்கப்பட்ட பலர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

## தமிழ் நூல்களுக்கு பரிசு

புதுடில்லி, டிச. 31

12 மொழிகளில் 56 புத்தகங்களை எழுதிய ஆசிரியர்களுக்கு தலா 500 ரூபாய் பரிசு வழங்கப்பட்டது. இவற்றில் 3 தமிழ்ப் புத்தகங்களாகும். "டென்மார்க்கைப்பார்", "பகல் அரசன்", "வழிகாட்டி" ஆகியவையே தமிழ் நூல்களாகும்.

## 'வேலைநிறுத்தம் செய்யாதீர்'

—எஸ். எல். எப். பி.

## 'வேலைநிறுத்தம் செய்யுங்கள்'

—எல். எஸ். எஸ். பி.

கொழும்பு, திங்கள்

8ந் திகதியன்று நடைபெறவிருக்கும் பொதுவேலை நிறுத்தத்தில் உத்தியோகத்தர்களையும் ஏனைய தொழிலாளர்களையும் கலந்துகொள்ளாதிருக்கும்படி கேட்டுக்கொள்ள எஸ். எல். எப். பி. அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர். வேலைத்தலத்துக்குத் தாமே சென்று அவர்களை வேலைக்குச் செல்லும்படி கேட்டுக்கொள்ள எஸ். எல். எப். பி. எம். பி க்களும் தலைவர்களும் தீர்மானம் செய்துள்ளனர்.

வேலை நிறுத்தம் செய்வதனல் துறைமுகத்திலிருந்து ராணுவத்தை வாபஸ் பெறச் செய்துவிட முடியாது என எஸ். எல். எப். பி. அங்கத்தவர்கள் தொழிலாளருக்கு எடுத்துக் கூறி வருகின்றனர்.

இதே சந்தர்ப்பத்தில். எல். எஸ். எஸ். பி. தலைவர்கள் தொழிலாளருடன் வேலை நிறுத்த இயக்கம்பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்துவதாயும், வேலை நிறுத்தத்துக்குத் தொழிலாளருக்கு வேண்டிய ஆதரவு கொடுப்பதாகவும் கூறி வருவதாகத் தெரிகிறது.

எம். ஈ. பி. அங்கத்தவர் ஒருவரான திரு. திலக் குலசேகரா, எம். ஈ. பி. 'வீக்'கும் தொழிலாளருக்கும் வேலை நிறுத்தத்தின்போது ஆதரவளிக்கும் எனக் கூறியுள்ளார்.

## குவாய்த்தில் பொதுத் தேர்தல்

லண்டன், டிச. 31

குவாய்த்தில் நேற்றுப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 20 சட்டசபை ஸ்தானங்களுக்கு 74 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

## கிறிஸ்மஸ் பரிசுக்கு இந்தியப் பொருள்கள்

ஸ்டட்கார்ட், ஜன 1

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பரிசுகள் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவது வழக்கமாதலால் ஸ்டட்கார்டிலுள்ள இந்திய ஜெர்மன் சங்கக் கட்டடத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஏராளமான பரிசுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

அழகான பொருள்கள், தந்தம், சந்தனக்கட்டை இவைகளில் செய்யப்பட்டுள்ள வேலைப்பாடமைந்த பொம்மைகள், நடனமாடும் பெண்ணின் உருவம்கொண்ட சிற்பம், அழகான கைப்பைகள், மற்றும் ஆயிரக்கணக்கான பொருள்கள் அங்கு இடம்பெற்றிருந்தன.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இப்பொருள்கள் ஐரோப்பிய வர்த்தகர்கள் தங்கள் வர்த்தகப் பொறுப்பை நிறைவேற்றமுடியாததால் விற்பனையாகாமல் இருந்தன. இந்திய வர்த்தகர்களின் நஷ்டத்தைக் குறைப்பதற்காக இந்திய ஜெர்மன் சங்கம் இப்பொருள்களைத்திரட்டி குறைந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்துள்ளது.

ஜெர்மனியர்கள் இப்பொருள்களில் அதிக சிரத்தை காட்டுவதால் இவ்வருஷ கிறிஸ்மஸ்ஸில் அநேக இந்தியப்பொருள்கள் பரிசுப்பொருள்களாக இடம்பெறும் என்று சொல்லலாம்.

குனேகா செண்டுகள்
வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்
தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார், மதராஸ் 20.
இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருதெனியா.
கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:
செல்வாஸ் (SELVAS)
(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)
31, செட்டியார் தெரு, கொழும்பு.
யாழ்ப்பாண விற்பனையாளர்:
தமிழ்ப் பண்ணை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# ஆங்கிலம்பயிற்சிமொழியாக நீடிக்கவேண்டும்

## இராஜ மன்னர் கருத்து

மைசூர், ஜன. 1

ஆங்கிலம் பிரிட்டனின் மொழி மட்டுமன்றி முக்கியமான உலக மொழியுமாகுமென ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. பி. வி. இராஜமன்னர் இங்கு நடைபெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மகாநாட்டிற் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"ஆங்கிலம் இந்தியாவின் தேசிய மொழியாக இருக்க முடியாது. ஆனால் பலகாலமாக ஆங்கிலம் வழக்கில் இருந்து வருவதால் இன்னும் நீண்ட காலத்துக்குக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கும் என்று நம்புகின்றேன். எங்களை முன்னர் ஆண்டவர்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். எனினும் எமது மன உணர்ச்சி பாதிக்கப்படவில்லை. இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா பிரிந்து சென்றது. ஆனால் அந்நாடு ஆங்கில மொழியைஏற்றுக்கொண்டது.'

## வைத்திய நிபுணர்கள் பற்றிய அரசாங்க முடிவு

கொழும்பு, திங்கள்

வைத்திய நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதை இன்று முதல் ஒழிப்பதென்ற அரசாங்கத்தின் முடிவு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக வைத்திய நிபுணர்களின் கோஷ்டி ஒன்றுக்கு பேட்டியளிக்கவும் பிரதமர் இணங்கியுள்ளார்.

## நஷ்டஈடு வழங்க ஒப்புதல்

மடுவக்கொல்லைப்பகுதியைச் சேர்ந்த சின்ன அரத்தனை தோட்டத்தை அதன் உரிமையாளர் திரு. எல். ஏ. யூனிஸ் முதலாளி திடீரென கைமாறி விட்டதால், அத்தோட்டத்தில் மேற்பார்வையாளராகக்கடமையாற்றிய சுப்பையா என்பவருக்கு கொடுக்கப்படவேண்டிய சேவைகால நிதி முதலியன வழங்கப்படவில்லை. இவை குறித்து சுப்பையா மேற்பார்வையாளரின் சார்பாக ல. தோ. தொ. யூனியன் வத்தகாமம் மாவட்ட பிரதிநிதி மேற்கண்ட நடவடிக்கையால் கண்டி தொழில் அதிபர் கூட்டிய மகாநாட்டில் சுப்பையாவிற்கு அவரின் மூன்று வருட சேவைக்காக ரூபா 300 கொடுப்பதாக முதலாளி ஒப்புக்கொண்டார்.

## தடிகளால் தாக்கப்பட்டார்

பசறை, திங்கள்

பசறையைச் சேர்ந்த எச். எப். பந்துசேன என்பவர் தடிகளால் தாக்கப்பட்டு, மண்டைக்காயங்களுடன் பதுளை பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதுசம்பந்தமாக எச். எம். பியதாசா என்பவரைப் பசறைப் பொலிசார் கைதுசெய்து பதுளைத் தற்காலிக நீதிபதி முன்பு ஆஜர்செய்தனர். ஜனவரி 4ந் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.



பிரிட்டிஷ் முதுபெரு ராஜதந்திரியான சர். வின்ஸ்டன் சர்ச்சில் சமீபத்தில் தன் 87-வது பிறந்த தினத்தைக் கொண்டாடினர். நண்பர்களுடன் விருந்துண்பதற்காக அவர் தன் லண்டன் வாசஸ்தலத்தை விட்டுப் புறப்படுகையில் எடுத்த படம்.

# 'சில வருடங்களில் ஆட்சி பொறுப்பு உழைப்பாளருக்கு வரும்'

## தொழிலாளர் கூட்டத்தில் பேச்சு

நாவலப்பிட்டி, திங்கள்

"எப்பொழுதும் பாடுபட்டு உழைத்து, தமது அன்றுட வாழ்க்கையைப் பல இன்னல்களின் மத்தியிலே நடத்திக் கொண்டிருக்கும் உன்னத உழைப்பாளர்களின் நெஞ்சங்களிலே இன்று மிகப் பெரிய முன்னேற்ற மாறுதல் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அவர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு தமது இழந்த உரிமைகளையும் தமக்கு வரவேண்டிய உரிமைகளையும் பெறுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு சில வருடகால எல்லைக்குள்ளே அதிகரித்து வரும் உழைப்பாளர் வர்க்கத்தின் சக்தி நாட்டின் ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொள்ளுமேயானால், அது ஆச்சரியப்படத்தக்கதோ அல்லது திடுக்கிட வேண்டியதோவான தொன்றல்ல."

இவ்வாறு நாவலப்பிட்டியைச் சேர்ந்த செங்கிளாஸ் தோட்டத்தில், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் கொடியை ஏற்றிவைத்துப் பேசுகையில் திரு. சு. பிரேமசம்புகூறினர். திரு. எஸ். இராமானுஜம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. சு. பிரேமசம்பு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"கடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது தேர்தல் அறிக்கையிலே பல முற்போக்கான திட்டங்களை எழுதி மக்களுக்குக் காட்டியது. ஓரளவு சோஷலிஸத் திட்டங்கள் அதில் இருந்தபடியினாலும் நாட்டிலே ஒரு முற்போக்கான கொள்கையுள்ள அரசாங்கம் ஸ்திரமானதாக அமையவேண்டுமென்பதாலும் தேசநலனை முன்னிட்டு பொதுமக்களும் லங்கா சமசமாஜக் கட்சியும் அக்கட்சி ஆட்சிபீடத்திற்கு வர உதவி செய்தார்கள். ஆனால் ஏழைகளின் உதவியுடன் வந்த அரசாங்கம் இன்று அவர்கள் மீது அதிகமான வரிச்சுமைகளைத் திணிப்பதிலும் அவர்களுக்கு அசௌகரியமான சட்டங்களை இயற்றுவதிலும் முன்னிற்கிறது.

முதலாளித்துவத்திற்கும் சோஷலிஸத்திற்கும் இடைப்பட்டபாதையிலே தான் போவதாக அரசாங்கம் கூறிக்கொள்கிறது. ஆனால் அப்படிப்பட்ட பாதை ஒன்று இல்லை என்பதுதான் உண்மையாகும். நடுப்பாதை என்று கூறிக்கொள்வதின் மூலம் நாட்டு மக்கள் அனைவரையுமே சாக்குப்போக்குச் சொல்லி ஏமாற்றிக் காலந்தாழ்த்திக்கொண்டு ஆட்சிப் பீடத்தில் இருந்து கொண்டிருப்பதுதான் அவர்களுடைய முழுநோக்கமாகும். முன்னைநாள் யு. என். பி. அரசாங்கத்திற்கும் இந்த அரசாங்கத்திற்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. அது முழுக்க முழுக்க முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயே செயலாற்றுகிறது.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் ஜெமினி கணேசன், பத்மினி நடித்த மீண்டசொர்கம்.

●

யாழ்ப்பாணம் மனோகரா பிரேம்நஸீர், பி' எஸ். சரோஜா நடித்த வண்ணக்கிளி

●

சாவகச்சேரி தேவேந்திரா ரஞ்சன் நடித்த "மன்னன் மகள் "

## ஆசிரியர்களுக்கு பிரியாவிடை

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டி இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திரு. க. செல்லத்துரை, பலபத்வெல அ. த. க. பாடசாலைக்கும், திரு. ஆ. இரத்தினம், வெலிமடைஅ.த. க பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடம் மாறிச் செல்லும் ஆசிரியரிருவருக்கும் அவர்களது நண்பர்கள் ஒரு பிரிவுபசார விருந்தொன்றை நடத்தினர்கள்.

## இடமாற்றம்

டிக்கோயா அரசாங்கஆஸ்பத்திரியின் முதலாவது அப்போத்திக்கரியாய் இருந்த திரு. பி. விஸ்வலிங்கம், ஹட்டன் அரசாங்க டிஸ்பென்ஸரிக்குப் பொறுப்பான அப்போத்திக்கரியாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

# 6முதல் 14 வயதுவரை கட்டாயக்கல்வி

## தேசிய கல்விக் கமிஷன் இடைக்கால அறிக்கை

கொழும்பு, திங்கள்

தேசியக் கல்விக் கமிஷன் இடைக்கால அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டது.

6 வயது முதல் 14 வயது வரை பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வியளிக்கும் சட்டம் கொண்டுவரப்படவேண்டுமென கமிஷன் யோசனை கூறியிருக்கிறது.

5 வயதுக்குப் பின்பே பாடசாலைப் பிரவேசம் இருக்க வேண்டும் என்றும் கமிஷன் கூறுகிறது. இலங்கைப் பிரஜைகளாய் உள்ள பிள்ளைகளுக்கு சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளே போதனை மொழியாய் இருக்கவேண்டும் என்று அது கூறியுள்ளது.

1961 ஆண்டு மார்ச் மாதம் இக்கமிஷன் நியமிக்கப்பட்டது.

## கூட்டுறவுத் தன்மையை வாழ்வில் வளர்க்க வேண்டும்

### பிரிவுபசாரக் கூட்டத்தில் தீவுப்பகுதி எம். பி.

ஊர்காவற்றுறை, திங்கள்

'தீவுப்பகுதியிலேயே கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன' என்று தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா குறிப்பிட்டார்.

தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பரிசோதகராக இருந்து மட்டக்களப்புக்கு இடமாற்றலாகிச்செல்லும் திரு. இ. இராசசுந்தரத்துக்கு புளியங்கூடல் நெசவுப்பாடசாலையில் அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே எம். பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. வி. ஏ. கந்தையா திரு. இ. இராசசுந்தரத்தின் சேவைகளைப் பாராட்டிப்பேசிய பின்னர் கூறியதாவது:-

'மரணச்சடங்கு காலங்களில் நம் கிராமங்களில் தேவாரம் படிப்பதற்குச் சம்பளம் கொடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்துபடகர்களை இங்குள்ள சிலர் வருவிக்கின்றனர். நாம் இதைவிடுத்து ஒவ்வொருவரும் தேவாரம் ஓதப்பழகிக்கொள்ள வேண்டும். இவ்வித செயல் சமூக வாழ்வில் ஓர் கூட்டுறவுத் தன்மையை வளர்க்கஉதவும்.'

தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்துக்கு திரு. இராசசுந்தரம் நன்றி தெரிவித்தார்.

## மேற்கு இரியன்

ஜாகர்த்தா, ஜன. 1

மேற்கு இரியன் விடுதலை சம்பந்தமாய் ராணுவத்தலைமை நிலையம் ஒன்றை இந்தோனேஷியா ஏற்படுத்தியுள்ளது. டச்சுக்காரர்களும் மேற்கு இரியனில் பலத்த ராணுவ ஏற்பாடு செய்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

விரைவில் வருகிறது!
சினிமாஸ் திரைகளுக்கு
★ படம் என்பார் சிலர்!
★ பாடம் என்பார் பலர்!!
★ பாசத்தேன் குடம் இது!!!
என பலரின் பாராட்டைப் பெறவருகிறது



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு எம். சரோஜா, எம். என். நம்பியார்
நடித்த
ராஜாமணி பிக்சர்ஸ்
பாசமலர்
திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ஜெமினி கணேசன் பத்மினி நடித்த
தினசரி மாலை 6-30, இரவு 9-30க்கும்
மீண்டசொர்கம்

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30
பிரேம் நஸீர் P.S. சரோஜா நடித்த
வண்ணக்கிளி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப் பெற்றது.